594

# VIJAYA THAVASI AND SIVA VÊDAN

(A Story from Mahabharatha)

IN TAMIL PROSE

BY


P. K. SREENIVASACHARIAR,

*Head Tamil Pandit,*

*Voorhees College, Vellore.*


---


PRINTED AT THE RECORD PRESS,

VELLORE.

---

1913



[*All rights reserved*]


PRICE ANNAS THREE


PRESENTED BY:

## சில புஸ்தகங்களைக் குறித்த அபிப்பிராயங்கள்

### பிரகலாதாழ்வான் சரிதை

"வேலூர்க்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் பு.க. ஸ்ரீநிவாஸாசாரியர், தமிழில் வசன நடையாக இயற்றிய பிரகலாதாழ்வான் சரிதையென்னும் புஸ்தகம், தெளிந்த இனிய நடையில் எழுதப் பெற்றிருத்தலின், மிக்க இன்பத்தை விளைவிக்கின்றது. இதனுள் அங்கங்கே எடுத்துக் காட்டப்பெற்றிருக்கும் சிறந்த பாடல்களும் படிப்போருடைய மனத்தைக் கவர்ந்து இன்புறுத்துமென்று எண்ணுகிறேன். இதனை இயற்றியவர் வடமொழியிலும் தென்மொழியிலும் நல்ல பயிற்சியுள்ளவரென்பது இதைப்படிக்கும்போது புலனாகின்றது. வசனநூல்களைப் படிக்க விரும்புவோர் இதனை வாங்கிப்படிப்பார்களாயின், இந்த நூலாசிரியரால், இதுபோன்ற இன்னும் சில நூல்களைத் தமிழ்நாடுபெற்று மகிழ்வடையுமென்று நினைக்கிறேன்."—மஹாமஹோபாத்தியாய பிரஹ்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், பிரஸிடென்ஸி காலேஜ், சென்னை.

---

### இடைக்காடர் திருவள்ளுவர் சரித்திரங்கள்

"பண்டைக்காலத்துத் தண்டமிழ்ச்சங்கமருவிய புலவர் பெருமக்களாலும், ஆலவாய்மேய அவிர்சடைக்கடவுளாலும் நன்கு மதிக்கப்பெற்ற இப்பெரியாருடைய சரித்திரங்கள், முருகதாஸரியற்றிய புலவர்புராணத்தைப் பெரும்பாலுந் தழுவி, இனிய தமிழ்நடையில் வேலூர் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரவர்களால் எழுதப்பெற்றிருக்கின்றன. இப்புத்தகம் தமிழ்நடை பயிலும் மாணவர்கட்கு மிகவும் பயன்படத் தக்கது."—செந்தமிழ்.

---

### விவேக சிந்தாமணி

"வேலூர் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மிஸ்டர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால் தமிழ்கற்கும் மாணவர்களுக்கும் ஏனையோர்க்கும் உபயோகமாகும்படி தெளிவான உரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது. உலகவறிவுறுத்தக்கூடிய செய்யுட்களே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ராஜபக்தியைப் புகட்டக்கூடிய மூன்று செய்யுட்களைத் தாமே இயற்றி நூலின் முடிவில் சேர்த்திருக்கிறார். மிகவும் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. ஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் உள்ள மாணவர்களுக்கு இந்நூல் மிகவும் பயன்படக்கூடியது."—சுதேசமித்திரன்.

---

ஸ்ரீ

# விசயத்தவசியும், சிவவேடனும்.

இச்சரித்திரம்,

வேலூர் காலெஜ் தமிழ்ப்பிரதமபண்டிதர்

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்

எழுதியது.

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION, PAGANERI.

வேலூர்

ரெக்கார்ட் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN
PAGANERI

[All rights reserved.]

1913

விலை அணா மூன்று.

# காப்பு

விசயத் தவசி விரும்புசிவ நாடிக்
கசிய வருள்பெற்ற காதை—நசையின்
விரிக்கத் திருமால் விழுக்கழலே நெஞ்சிற்
றரிப்ப னுறுபத்தி சார்ந்து.

செய்தற்கு நாடியவை சீர்க்கரும மாமெண்ணி
லெய்தும் பயன்சித்தி யெய்துவதாய்--பொய்தவிரு
மாதி பகவனு ராரருளா னெஞ்சேநற்
போத முறுசெயலைப் பூண்.

# நூன்முகம்

தமிழில், இதிஹாஸ புராணங்களெல்லாம், சிறுவரும் சிறுமியரும் மற்றுத் தமிழ்ப்பயிற்சி யதிகமில்லாதவர்களும் படித்தறிதற்கியலாதபடி அருஞ்செய்யுள் நடையிலேயே அமைந்திருக்கின்றனவாதலால், அவற்றைப் படித்துணராதவர்கள் பலர் நம் தமிழ்நாட்டில் இருக்கின்றார்கள்.

சிலர் அவற்றை வசனநடையில் எழுதி வெளியிடினும், அவையும் செய்யுள்நடை நூல்களைப்போலவே படித்தறிவதற்குக் கடினமாகவுள்ளன. சிலர் இதிஹாஸ புராணங்களை எளிய சிறந்த வசனநடையில் எழுதி வெளியிட்டாலும், அவை பெரும்பாலும் முழுப்புஸ்தகங்களாகவே யிருக்கின்றனவாதலால், விலை அதிகமாகவுள்ள அம்முழுப் புஸ்தகங்களை வாங்கிக்கொள்ளக்கூடியவர்கள் மாத்திரமேயன்றி, மற்று, அவ்வளவு விலைகொடுத்து வாங்கச் சக்தியில்லாதவர்களும், சக்திபுடையவர்களாயினும் அம்முழுப் புஸ்தகங்களை முற்றும்படிக்க அவகாசமில்லாததனாலும் முழுதும்படிக்க விருப்பமின்மையாலும் ஆங்காங்கு இலைமறைகனிபோலப் பொதிந்துகிடக்கும் இனிய சிறந்த சரித்திரங்களை மட்டுமே தனித்தனிப் புஸ்தகங்களாகக் கிடைப்பின் வாங்கிப் படிக்க விரும்புகின்றவர்களும், அவற்றிலுள்ள சிறந்த கதைகளைப் படித்தறிதல் இயலாது. ஆதலால், இதிஹாஸ புராணங்களிலுள்ள சிறந்த இனிய கதைகளெல்லாம், பலர்க்கு நன்கு வெளிப்படாமல் மறைந்திருக்கின்றனவென்பது அனைவரும் அறிந்ததே.

ஆதலின், இவற்றையெல்லாங் கருதி, என்னுடைய நண்பர்களாகிய அறிஞரிற் பலரும், இதிஹாஸ புராணங்களிலுள்ள அரிய பெரிய சரித்திரங்களையெல்லாம் எளிய செந்தமிழ்நடையில் எழுதித் தனித்தனிப்புத்தகரூபமாகச் சொற்பவிலைகொடுத்துப் பெறலாம்படி வெளியிட்டால் நல

மென்று கூறினர். அவ்வன்பர்கள் கூறியதை யானும் நன்றென்று உணர்ந்துகொண்டு, அங்ஙனமே எழுதிவருவனவற்றில், 'விசயத்தவசியும், சிவவேடனும்' என்னும் இந்தச் சரித்திரமும் ஒன்றாகும்.

'விசயத்தவசியும், சிவவேடனும்' என்னும் இச்சரித்திரம், அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழியில் வில்லிபுத்தூரார் என்ற சிறந்த கவிஞர் இயற்றியுள்ள பெருங்காவியமாகிய மஹாபாரதத்தில், ஆரணியபருவத்திலுள்ள அருச்சுனன்தவநிலைச்சருக்கத்தைத் தழுவி எழுதியதாகும். அவ்வருச்சுனன் தவநிலைச்சருக்கத்தில் இச்சரித்திரம் மிக அழகாக அமைந்துள்ளதனால், அதனை வசனநடையாக எழுதி வெளியிடவேண்டுமென்று எனக்கு அவாவுண்டாயிற்று. அச்சருக்கத்தில் சிறுவரும் சிறுமியரும் படித்தறிதற்காகாத இடக்கராயுள்ள சில பகுதிகள் இவ்வசனநூலில் விலக்கிவிடப்பட்டன.

செய்யுள்களை வசனநடையாக மாற்றியெழுதுவதில், கருத்துநயங்களை ஒருவாறு நம்மால் வெளியிடவியலுமேயன்றி, மற்றுச் செய்யுளின் இசையின்பத்தையும், சொல்லமைப்பு நயத்தையும், மோனை யெதுகைச் சிறப்புக்களையும், பிற விசேஷங்களையும் வெளியிடுதற்கியலாதென்பதை அன்பர்கள் அறிவார்களாக.

பெரியோர்களே, இவ்வசனநூலை ஆதரித்து எனது கருத்தை நிறைவேற்றி மேன்மேல் உதவிபுரிய மிகவும் பிரார்த்திக்கின்றேன்.

வேலூர்
1913ஆ டிஸம்பர்மீ 20உ. | பு. க. ஸ்ரீ.

ஸ்ரீ

# விசயத்தவசியும், சிவவேடனும்.

இந்தப் பரதகண்டத்திலே அஸ்தினபுரியில் சந்திர குலத்திலே வியாசமுனிவருடைய அநுக்கிரகத்தால் பிறந்தவர்களாகிய திருதராஷ்டிரன் பாண்டு என்ற அரசர்கள் இருந்தார்கள். இவர்களில் திருதராஷ்டிரன் மூத்தவன். பாண்டு அவனுக்கு அடுத்த தம்பி. விதுரன் அவனுக்கு அடுத்த தம்பி. திருதராஷ்டிரன் மூத்தவனானாலும் பிறவிக்குருடனானதலால், விதுரனை மந்திரியாக வைத்துக்கொண்டு பாண்டுவே இராசாங்ககாரியம் பார்த்துவந்தான். திருதராட்டிரனுக்குத் துரியோதனன் துச்சாசனன் முதலிய நூறு பிள்ளைகளும், துச்சளை என்னும் ஒரு பெண்ணும் பிறந்தார்கள். பாண்டுவுக்குக் குந்தி மாத்திரி என்னும் இருவர் மனைவிமார்கள். குந்தி, கணவனுடைய அநுமதிப்படி, தனக்கு இளமையில் துருவாசமுனிவர் உபதேசித்திருந்த மந்திரத்தின் மகிமையால் வந்த யமதருமராஜனால் யுதிஷ்டிரனையும், வாயுதேவனால் பீமசேனனையும், தேவேந்திரனால் அருச்சுனனையும் பெற்றாள். அவளுடைய சக்களத்தியான மாத்திரி, குந்தியால் அம்மந்திரம் உபதேசிக்கப்பெற்று, இரட்டையராகிய அசுவினிதேவர்களால் நகுலன் சகதேவன் என்னும் இரட்டைப்பிள்ளைகளைப் பெற்றாள். பாண்டு சிலகாலத்துக்குப்பின் இறந்துபோனான். பின்பு, பாண்டுபுத்திரராகிய பாண்டவரும் துரியோதனாதியரும், கிருபாசாரியர் துரோணாசாரியர் என்பவர்களிடத்தில் வில்வித்தை கற்றுக்கொண்டார்கள். பாண்டவர்கள் கல்வியிலும் குணத்திலும் சிறப்படைந்திருக்கவே, அவர்களிடத்தில் ஆசிரியர்களுக்கு மிக்க பிரீதி உண்டாயிற்று. அப்போதே துரியோதனாதியர்

பொறாமையினால் பாண்டவரிடத்தில் பங்காளிபகைகொண்டு பலதீமைகள் செய்துவந்தார்கள். வருகையில், அரக்குமாளிகையில் இட்டுத் தங்களை எரிக்கும்படி துரியோதனனுகிய செய்த பிரயத்தனத்தைப் பாண்டவர்கள் தம் சிற்றப்பனுகிய விதுரரால் தெரிந்து தப்பிப் பிராமணவேஷம் தரித்துத் திரிந்து பாஞ்சாலதேசத்து அரசன் மகளாகிய திரௌபதியின் சுயம்வரத்துக்குப் போனுர்கள். அங்குக் கட்டியிருந்த சுழலும் யந்திரத்தைப் பாணப்பிரயோகஞ்செய்து அறுத்துத் தள்ளினவர்தான் திரௌபதியைக் கல்யாணஞ்செய்துகொள்ளலாம் என்று அவளுடைய தந்தை ஏற்பாடு செய்திருந்தான். அருச்சுனன் அப்படியே அந்த யந்திரத்தை அறுத்துத் தள்ளித் திரௌபதியைக்கொண்டுவர, தாயார்சொற்படி அந்த ஒருத்தியை ஐவரும் மணஞ்செய்துகொண்டு அஸ்தினபுரத்துக்கு வந்தார்கள். வந்தவுடனே, திருதராட்டிரன் இவர்களை இந்திரப்பிரஸ்தத்திலும் துரியோதனன் முதலியோரை அஸ்தினபுரியிலும் இருந்து அரசாளும்படி இராச்சியத்தைப் பங்கிட்டுக்கொடுத்தான். பின்பு தருமபுத்திரன் தம்பிமார்களைக்கொண்டு திக்குவிசயஞ்செய்து, செய்வதற்கு அருமையான ராஜசூயம் என்னும் யாகத்தைச் செய்துமுடித்து வெகுமகிமையுடன் விளங்கினுன். அதைக்கண்டு துரியோதனன் இன்னும் அதிகமாகப் பொறாமைகொண்டு யுதிஷ்டிரனைத் தந்திரமாகத் தன்னிடம் அழைப்பித்துத் தன் மாமனுன சகுனியென்னும் துஷ்டனைக்கொண்டு, அவனுடன் சூதாடுவித்து அவனது செல்வங்களையெல்லாம் அபகரித்துக் கொண்டதுமன்றி, அவனையும் அவன் தம்பிமார்களையும் அவர்களின் மனைவியான திரௌபதியையும் அடிமையாக்கி, அவளைத் தீண்டக்கூடாத காலத்தில் துச்சாசனனைக்கொண்டு சபையில் பலவந்தமாகக் கொண்டுவந்து துகிலுரியவும் செய்தான். ஸ்ரீமந்நாராயணனுடைய திருவவதாரமூர்த்தியாகிய ஸ்ரீகிருஷ்ணனுடைய அநுக்கிரகத்தால்

அவள் மேன்மேல் ஆடை வளரப்பெற்று மானங்காத்துக் கொண்டாள். பின்பு அவளுடைய கற்பின்பெருமைக்கு அஞ்சித் திருதராட்டிரன் அவர்களை அடிமைத்தனத்தினின் றும் நீக்கிச் செல்வத்தையும் கொடுத்தனுப்பினன். துரி யோதனாதியர் அதை மறுத்து அவைகளையெல்லாம் பிடுங் கிக்கொண்டதுமன்றி, மறுசூதாடி அடிமைநீங்கின அவர் களைப் பன்னிரண்டுவருஷம் வனவாசமும் ஒருவருஷம் அஜ் ஞாதவாசமும் செய்துவந்தால் அரசுபெறுவீரென்று ஏற்பாடு செய்து அனுப்பினார்கள். அஜ்ஞாதவாசம் என்பது ஒரு வரும் தம்மை இன்னாரென்று அறியாதபடி ஒரு நாட்டில் வசித்தல். அப்படியே பாண்டவர்கள் திரௌபதியுடனே நாட்டைவிட்டுக் காட்டுக்குப் போவாரானார்கள்.

இனிமையான சொற்களையுடைய தருமபுத்திரனும், அவனுடைய தம்பிமார் நால்வரும், அவர்களுடைய மனைவி யாகிய யாக அக்கினியில் தோன்றிய திரௌபதியும், தங்க ளுடைய சதுரங்கசைனியங்களையும் இராச்சியத்தையும் பகைவர்களாகிய துரியோதனாதியர் பறித்துக்கொள்ளவே, அதன்பின்பு, செய்வதற்கு அருமையான யாகங்களைச் செய் தவர்களாகிய பன்னீராயிரம் முனிவர்கள் தம்மைச் சுற்றி லும் வராநிற்க, மலைப்பக்கங்களையுடைய காமியம் என்னும் காட்டை அடைந்தார்கள். இந்தக் காமியவனம் சரசுவதி நதிக்கரையில் உள்ளது என்கிறார்கள். சந்தனக்கட்டை களும் அகிற்கட்டைகளும் நல்லமணம்வீசப்பெற்ற மலையரு விகளும், மலைச்சுனைகளும், மதம்பிடித்த ஆண் யானைகள் பெண்யானைகளுடனே நீரில் விளையாடப்பெற்ற காட்டாறு களும் அங்கே மிகுதியாக உள்ளன. குளிர்ச்சியும், மரநிழ லும், காய்களும், கனிகளும், மற்றும் பலபொருள்களும் அந் தக்காட்டில் அங்கங்கே அதிகமாக உண்டு. அங்கே அடிக் கடி மேகங்கள் மழைபொழியும். அப்படிப்பட்ட செழிப்

பான அக்காமியவனத்தின் அழகைப் பாண்டவர்கள் பார்த்தார்கள். அக்காட்டில் பாண்டவர்கள் பிரவேசித்தபிறகு இவர்கள் நல்லோர்களாதலால், இவர்களுடைய மகிமையால், அங்கங்கே தானாகவே பற்றியெரிகிற காட்டுத்தீயின் புகையும் தணிந்தது. யாகம்முதலான வைதிககாரியங்கள் மிகுதியாக முறைப்படி நடந்ததனால், ஹோம அக்கினியின்புகையே அதிகமாகச் சூழ்ந்திருந்தது. அந்தப்புகையினால் மேகங்கள் உண்டாய் விசேஷமாக மழைபொழிந்தன. ஒன்றுக்கு ஒன்று பகையாகிய சிங்கங்களும் யானைகளும் தமக்குள் விரோதம் நீங்கி அன்புடன் ஒன்றுசேர்ந்து கூடத்திரிந்தன. அவ்விடம் முழுவதும் இமவத்பருவதத்தின் சாரல் எவ்வளவு அழகை உடையதோ அவ்வளவு அழகை அடைந்தது.

பாஞ்சாலதேசத்தரசனாகிய துருபதமஹாராஜனும், அவன்மகனாகிய திருஷ்டத்யும்நனும், இன்னும் அவர்கள் குலத்திற்பிறந்த அரசர்களெல்லோரும், மச்சநாட்டரசனாகிய விராடராஜனும், இவ்வரசர்களுடைய உறவினர்களும், இன்னும் வேறுவேறு தேசத்தரசர்களில் அன்புடைய உறவினர்கள் யார்யாருண்டோ அவரவர்களும், சிநேகத்தையுடையவர்களும், நூல்களை மிகுதியாகக்கற்றறிந்தவர்களாகிய வித்வான்களும் அந்தக்காமியவனத்திலிருந்த பாண்டவர்களை வந்தடைந்து, அவர்களுக்குச்சுற்றிலும் நெருங்கியிருந்தார்கள். ஸ்ரீமஹாலக்ஷ்மிக்குக் கணவனும், யாதவகுலத்தில் தோன்றின ஆண்சிங்கம்போன்றவனும், தேவர்களுக்குத் தலைவனும், வெயிலுக்கு உதவுகிற நிழல்போலப் பலவகைத்துன்பங்களை ஒழிப்பதற்குக் கருணைசெய்கின்றவனும், வேதங்களால் துதிக்கப்படுகின்ற ஞானசொரூபியுமாகிய கண்ணபிரானும், பாண்டவர்கள்செய்த பெருந்தவத்தின் பயன்போல அங்கே வந்துசேர்ந்தான். இப்படி வந்தடைந்த இவர்களெல்லோரும், பாண்டவர்கள் பூமியை இழப்பதற்குக் காரணமான பாவத்

தைத்தரும் கொடிய சூதாட்டம் நடந்தசெய்தியைக் கேட்டு மிகவும் மனம்பிளந்தவர்களாய், அவர்களைக் கண்கொண்டு காணமாட்டாமல் வருந்தி, தருமபுத்திரனை நோக்கி, மிகுந்த அன்போடு இந்தஇந்தவார்த்தைகளைச் சொல்வாரானார்கள்:—

அவர்களிற் சிலர், "உயர்குலத்திற்பிறந்த பூங்கொடி போன்ற அழகிய திரௌபதியை இராசசபையிற் கொணர் வித்து அவமானப்படுத்திய கொடிய துரியோதனனை, அவ னுடைய சேனையோடு ஓடிப்போகும்படி இப்பொழுதே தாக்குவோம்" என்று தங்கள் வலிமையும் கோபமும் வெளித் தோன்றும்படி சொல்வாரானார்கள். சிலர், "இன்றைத்தினமே சீக்கிரமாகத் தும்பைமலர்மாலையைச் சூடி யுத்தத்துக்குப் போய், வில்லைவளைத்துத் துச்சாதனன் முதலிய தொண் ணூற்றென்பதுபேரையும் ஒவ்வொருவனாக வாடிக் கீழே விழும்படிசெய்து, அவர்களுடைய உயிர் வீரசுவர்க்கத்திற் சென்று சேரும்படி அழிப்போம்" என்று சொல்வார்கள். சிலர், "சூதாடி வஞ்சனைசெய்தவனாகிய சுபலனென்பவன் பெற்ற புத்திரனும் துரியோதனனுடைய மாமனுமாகிய கொடிய சகுனியைக் கணப்பொழுதிலே கொடியபோரில் உடம்பு விழவும், செந்நிறமான அம்பு தைத்தவழியே உயிர் நீங்கவும் நாசமடைவிக்கும்பொருட்டுப் புறப்படுங்கள்" என்று சொல்வார்கள். குருகுலத்துஅரசர்களுக்குத் தேரை ஓட்டு கிற சாரதியாகிய அதிரதனது குமாரனும், துரியோதனனது தோழனுமாகிய கர்ணனை* த்தேவர்கள் ஆகாயத்தில் எல்லாத்

---

* கர்ணன்—பாண்டவர்கள் தாயாகிய குந்திதேவி கன்னிகையா யிருக்கும்போது தனக்குத் தூர்வாசமுனிவர் உபதேசித்த மந்தி ரத்தைப் பரீக்ஷிக்கும்பொட்டுச் சூரியனை நினைத்து அம்மந்திரத் தை உச்சரிக்க, உடனே அத்தேவன் வந்து அவளுக்கு அனுக்கிர கித்ததனால் அவளிடம் பிறந்த புத்திரன்; இவனைப் பிறந்தபோ தே குந்தி அவமானத்துக்கு அஞ்சி ஒருமிதக்கும்மரப்பெட்டியில்

திக்குக்களிலும் இருந்து வேடிக்கைபார்க்கும்படி இப்பொ ழுதே போர் செய்வோம்" என்று சொல்வார்கள். அந்தஅந்த அரசர்களெல்லோரும், பாண்டவர்களுக்கு வந்த அவமானமா னது தங்களைப்பிடித்து இடைவிடாமல் முன்னே தள்ளு தலால், பொங்கிக்கிளம்புகிற கோபத்தை யுடையவர்களாய், ஒருவரைக்காட்டிலும் ஒருவர்க்கு வாய்ச்சொல் மிகவும் முந்திமுந்திப் புறப்படக் கீழ்ச்சொன்ன இந்தஇந்தவார்த்தை களைச் சொன்னார்கள்.

அச்சொற்களைக் கேட்டுக்கொண்டிருந்தருளிய கண் ணபிரான், இந்திரன் தேவர்களோடு கற்பகச்சோலையில் வந் திருந்தாற்போலச் செழித்துள்ள காமியவனத்திலே வந்தி ருந்த தருமபுத்திரன்முதலிய அரசர்களுக்குச் சொல்வா ரானார்: "இந்தக்கோபத்தை இப்பொழுது விடுவீர்களாக. வனவாச அஜ்ஞாதவாசங்களின்பின்பாக உங்களுடைய பல பராக்கிரமங்கள் வெளிப்படும்படி பகைவர்களைக் கொல்லுவீர் களாக. குற்றமுள்ள மனத்தையுடையவர்களாய் வஞ்சனை செய்பவர்கள் கெட்டேபோவார்கள் என்னும் வார்த்தையை நீங்கள் கேட்டறியீர்களா? துரியோதனனுடைய சபை யில் சம்மதித்துச்சொன்ன உடன்பாட்டின்படி இனிமேல் பலகாடுகளில் வாசஞ்செய்திருந்து அஜ்ஞாதவாசமும் கழிந்து நிறைவேறினபின்பு செய்வதற்குஉரிய போர்த்தொ ழிலை இன்றைக்கே செய்ய நினைத்துப் பேசுதல் பேதைமை. இப்படி யோசனையில்லாமல் பேசுதலால் உண்டாகும் பயன்

---

வைத்துப் பூட்டிக் கங்கையாற்றில் விட்டுவிட, அதனைத் திருத ராட்டிரன்தேர்ப்பாகன் கண்டு எடுத்துத் திறந்துபார்த்துக்கொண்டு போய்த் தன்மனைவியாகிய ராதையுந் தானுமாக வசுசேனனென்று பேரிட்டு வளர்த்தான்; இவன், பின்பு, துரியோதனனுக்குப் பிராணசிநேகிதனாகி, அவனருளால் அங்கதேசத்துக்கு அரச னாயினன்.

என்ன? தருமபுத்திரனே! நீ நான்சொல்வதைக் கேட்பா யாக: நீங்கள்பெற்ற புத்திரர்களையும் உங்களைப்பெற்ற தாய்முதலிய எல்லோரையும் உன்உறவினருடைய இருப் பிடங்களில் இருக்கும்படி ஏற்பாடுசெய்து காட்டிலே நீங்க ளும் வசித்துக் கழிக்கக்கடமைப்பட்ட காலத்தைக் கழி த்துவிட்டுத் திரும்பி நாட்டில் வந்தால், நல்லஅதிருஷ்ட முடையவர்கள் அடைந்து அனுபவிக்கக்கூடிய நன்மைகளை யெல்லாம் கண்டடைவாய். அப்போது, உன்னிடத்தில் நல்ல சிநேகமுடையவர்கள் செய்யும் நல்லுதவிகளையெல்லாம் பெறுவாய். உங்கள்தாயாகிய குந்திதேவியைச் சுபலனது மகளாகிய காந்தாரியின்பக்கத்தில் இருக்கும்படி வைத்திடுங் கள். உங்கள் புத்திரர்களைத் துருபதமகாராசனது ஊரில் வைத்துவிடுங்கள். அன்றியும், அன்புடையவர்களாகிய உற வினர் முதலானவர்களை, உங்களைவிட்டுப் பிரியும்படி அவ ரவர்க்கு உரிய வழியே அனுப்பிவிடுங்கள். நீங்கள் இப்படி அவர்களை அனுப்பிவிட்டு, நல்லநீதியுடனே காட்டில் வசித் தலே நன்மை" என்று கண்ணபிரான் அருளிச்செய்தார்.

கண்ணபிரான் சொன்ன வார்த்தையைத் தருமபுத்தி ரன் கேட்டு மகிழ்ந்து, உண்மையான அன்புடைய புத்திரர் முதலாக மேலும் சொல்லப்படுகிற தேகபந்துக்களையெல்லாம் கண்ணபிரானது விருப்பத்தின்படியே அவர்சொன்ன அவ்வவ் விடங்களிலே சேரும்படி அனுப்பிவிட்டு, பன்னிரண்டுவருஷ காலமும் அச்சமடையத்தக்க வனத்தில் வாசஞ்செய்கிற விருப்பத்தையே விருப்பமாகவுடையவனானான். மேகம்போ ன்ற திருமேனி நிறத்தையுடைய கண்ணபிரானும் தம்மு டைய துவாரகாபுரிக்குச் சென்றுசேர்ந்தார். மற்ற அரசர் முதலியோரும் தங்கள் தங்களுடைய பட்டணங்களிற்சென்று சேர்ந்தார்கள். ஞானத்தையுடைய முனிவர்களும் தனக்கு ஒப்பாகப்பெறாத யுதிஷ்டிர மகாராசனும் அவனுடைய

தம்பிமாரும் காட்டையே தாங்கள் அரசாளுகிற ராச்சிய மாகக் கொண்டார்கள்.

அந்தக் காமியவனத்தில் வந்த அரசர்களெல்லாம் சென்றபின்பு, கொடிய காட்டில் இருந்து இடைவிடாது தவத்தைச் செய்கிற வியாசனென்று மேலாகச்சொல்லப்படு கிற முனிசிரேஷ்டர், தம்முடைய புத்திரனாகிய பாண்டுவின் குமாரர்கள் நாட்டை இழந்து காட்டை அடைந்ததைக் கேள்வியுற்று, அவர்களிடத்தில் இரக்கத்தோடு வந்த டைந்தார். பாண்டவர்கள், வியாசபகவான் வருதலைப் பார்த்து எதிரேபோய் மரியாதைசெய்து அழைத்துக்கொண் டுவந்து துதித்து, அவருடைய திருவடித்தாமரைகளைக் கண்களில் ஒற்றிக்கொண்டு தலையின்மேல் வைத்துக்கொண் டவர்களாய், உயிரும் உடம்பும் குளிர்ச்சியடையப்பெற்று, புண்டரத்தையணிந்த நெற்றியையுடைய அவ்வியாசமுனி வர்க்குப் பூஜைசெய்தபிறகு, துரியோதனன் செய்த வஞ்ச னைகளெல்லாவற்றையும் சொன்னார்கள். தம்மை வந்தடைந் தவர்களுக்கு ஊன்றுகோல்போல உதவுகிற தவஞ்செய்யும் வியாசமஹாருஷியும், பாண்டவர்களைப்பார்த்து, "முன்னே நடந்துபோன செய்கைகளையெல்லாம் சொல்லுதலாற்சிறிதும் பயனில்லை. அவைகளையெல்லாம் நாம் முன்னையே அறிந் தோம். அவைகளைச் சொன்னால், அது, கேட்பதற்குக் கொடியதாயிருக்கிறது. அப்படிப்பட்ட செயல்கள் நடந்தது முற்பிறப்பிற்செய்த பாபத்தின் பயன். மனம்பிரிந்த பங் காளிகளைக்காட்டிலும், பெரியபகைவர்கள் நல்லவர்களாவர் என்றல்லவோ அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். தாயாதிகள் பகைவர்களைக்காட்டிலும் கொடியவராதலால் இப்படி வஞ் சனைசெய்தார்கள். மனம்முறிந்து பிரிந்த ஞாதிகளோடு வெளிக்குச் சிநேகமாய் நாட்டில் அவர்களுடன் இருப்பதைக் காட்டிலும், விரோதங்கொண்டு பிரிந்து காட்டில் இருப்பதே

நல்லது. ஆசைக்கு ஓர் அளவு உண்டா? ஆதலால் துரியோதனாதியர் இப்படி செய்தார்களானாலும், நீங்கள், உள்ளமட்டில் திருப்தியோடு இருக்கவேண்டும். நெருங்கின உறவினர் துன்பமடையும்படி சிலர் பகைவர்களாய்த் தம்மில் ஒன்றுசேர்ந்து கெடுதிசெய்தாலும், அவரவர்களுக்கு உள்ளதுதான் உண்டு. அதை அழிக்கமுடியாது." என்று சொல்லி நன்றாக அறிந்துகொள்ளும்படி அவர்களைத் தேற்றி, ஞானக்கண்ணையுடைய கிருபாமூர்த்தியாகிய வியாசமுனிவர், வருத்தப்பட்ட பாண்டவர்களுடைய கவலையை நீக்கினார். பாண்டவர்கள் மிகுந்த கல்விகேள்விகளை உடையவர்களானாலும், வியாசர்சொல்லியே கவலைதீர்ந்தார்கள்; மலையின் உயர்வு அம்மலைக்கு அறியும்படி உள்ளதோ? கடவுளுடைய ஸ்தோத்திரமான தெய்வத்தன்மையுள்ள வேதங்களெல்லாவற்றையும் இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்காக ஒழுங்குபட வகுத்தவராகிய வியாசபகவான் பின்னும் சொல்லுபவராய், "இக்காலத்தில் நீங்கள்மாத்திரமே இப்படி சூதில் நாட்டை இழந்தீரல்லீர். முன்காலத்தில் பூலோகமுழுவதையும் ஒருங்கே அரசாண்ட ஆஜ்ஞாசக்கரத்தையுடைய சக்கரவர்த்தியொருவன் இருந்தான். அவன் எல்லோருடைய நாவாலும் புகழப்படுபவன்; காவேரிநதி எப்படி எப்பொழுதும் இடைவிடாமல் நீர்பெருகுகின்றதோ அப்படி குளிர்ந்த அருள் பெருகுகின்றவன். அவன்பெயர் நளன். அவன் புஷ்கரன் என்ற தாயாதியினிடத்தில் சூதாட்டத்தில் தோல்வியடைந்து இராச்சியத்தை இழந்து தீப்பரவிய காட்டிற் போய் அலைந்த கதை உங்கள்காதிற் படவில்லையோ?" என்றுசொல்லி இன்னமும் உரைப்பவராய், "பாதத்தில் வீரக்கழல்கட்டியவனே! இப்பொழுது அருச்சுனனே, மேருமலையை வில்லாகக்கொண்ட சிவபெருமானிடத்திற் போய், அவருடைய அநுக்கிரகத்தால் பாசுபதம்

என்ற அஸ்திரத்தை வாங்கினாலல்லாமல், அழிப்பதற்கு அருமையான பகைவர்களை அழிப்பது கூடாது" என்று அருளிச்செய்தார். அப்போது, தருமபுத்திரர் வணங்கி, வியாசமாமுனிவருடைய வார்த்தையை அன்போடு தன் தலைமேற்கொண்டு கௌரவித்து, வில்லைக்கொண்டுசெய்யும் தொழிலுக்குச் சிறந்தவனாக உலகத்தவர்களால் நன்குமதிக்கப்படுகிற தேவேந்திரனுடைய குமாரனாகிய அருச்சுனனை நோக்கி, "ஐயனே! நீ வெள்ளிமலையாகிய ஸ்ரீகைலாசகிரியின் சாரலை அடைந்து, சிவபிரானைக்குறித்து, எவர்க்கும் செய்வதற்கு அருமையான சிறந்த தவத்தைக் கஷ்டப்பட்டுச் செய்தாவது, அச்சிவனது அருளால் பாசுபதம் பெறுவாயாக" என்றுசொல்லிப் போதற்கு விடைகொடுத்தார். அப்போதே அருச்சுனன், உலகத்தில் தமக்கு வேறொருவர் நிகரில்லாத வியாசமுனிவருடைய திருவடிகளை மனப்பூர்வமாக வணங்கி, அப்பொழுது ஒரு மந்திரத்தை முறையாக அவ்வியாசபகவானிடம் உபதேசம்பெற்று, 'நாள்செய்வது நல்லோர் செய்யார்' ஆகையால், திதியும் நக்ஷத்திரமும் மிகவும் சிறப்புடையதாகிய ஒருசுபமுகூர்த்தத்தில் பிரயாணப்பட்டான். அவனுக்கு யக்ஷர்கள் என்ற தேவசாதியார் வழிகாட்டினார்கள். 'கொடிய விரோதங்கொண்ட மனமுள்ளவர் தந்திரமாகக் கூட்டங்கூட்டிச் சபைவைத்து ஆலோசித்து விஷம்போன்ற கொடிய தீங்குகளைச் செய்தார்களானாலும், உங்களைப்போன்ற நல்ல அரசர்கள் கவலைப்படமாட்டார்கள். ஆதலால் அஞ்சாதீர்கள்' என்று தைரியம்சொல்லிவிட்டு வேதவியாசரும் திரும்பிப் புறப்பட்டுப்போனார்.

தசரதகுமாரனாகிய ஸ்ரீராமபிரானைப்போன்றவனாகிய அருச்சுனன், மனத்தில் தவஞ்செய்யவேண்டுமென்ற விருப்பம் அதிகமாக உண்டானதனால், மரவுரியை ஆடையாக

உடுத்துக்கொண்டான்; சடைமுடியுடையவனானான்; இப்படி தவவேடம் தரித்து, தற்காப்புக்காக முதுகில் அம்பறாத்தூணி கட்டிக்கொண்டு கையில் காண்டீவமென்னும் வில்லையும் அம்பையும் ஏந்திக்கொண்டான்; வழியின் இரண்டுபக்கங்களிலும் ஊசியும் நுழையக்கூடாதபடி மரம் செடி கொடிகள் அடர்ந்து நெருக்கம்மிகுந்த காடுகளைக் கடந்தான்; சிங்கங்களும் யானைகளும் போரைச்செய்கிற பக்கங்களையுடைய மலைகளைக் கடந்தான்; கொடிய பிசாசங்களும் பூதங்களும் யக்ஷர்களும் மற்றைத் தேவகணங்களும் வாசஞ்செய்கிற மலைச்சிகரங்களைக் கடந்தான்; இப்படி இவைகளையெல்லாம் கடந்துபோய்ப் பாரதவர்ஷத்தின் வடதிசைமுடிவைப் பார்த்தான்.

சத்தியவிரதன் என்று மேலாகச் சொல்லப்படுகிற தருமபுத்திரனுடைய தம்பியாகிய அருச்சுனன், அவ்வடக்குத்திக்கில், மலைகளுக்கெல்லாம் அரசன் என்று சொல்லப்படும் இமயமலையைச் சேர்ந்து, அந்த மலையரசன் உமாதேவியை மகளாகப்பெற்ற பாக்கியமுடையவனாதலால் மிகுந்த பக்தியோடு அதை வணங்கி, தவஞ்செய்வதற்குத்தக்க வனங்களிலெல்லாம் இருந்து அக்கினியை ஹோமம் முதலியவைகளால் வளர்த்துவருகிற முனிவர்களுடைய திருவடித்தாமரைகளைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துத் தனது முடியின்மேல் வைத்துக்கொண்டான். அருச்சுனன், அம்மலையிடத்தில் சாரணர்களும், யக்ஷர்களும், வித்தியாதரர்களும் முதலான பலவகைத் தேவசாதியார்களை அங்கங்கே கண்டுகண்டு மிகுதியாகக் களிப்படைந்தான். அவர்கள், வேதங்களிற் சொல்லிய விதிப்படியே சுற்றிலும் உள்ள காடுகளிலெல்லாம் தங்கியிருந்துகொண்டு, பிரம விஷ்ணு ருத்திரர் என்ற திரிமூர்த்திகளின் பதங்களை விரும்பி, அவைகளை

அடைவதற்குக் காரணமான தவத்தைச் செய்துகொண்டிருந்தார்கள். சிங்கங்களும் கொடிய யானைகளும் ஒன்றோடொன்று போர்செய்கிற முழக்கத்தைக் கேட்டும், அவ்வொலிக்கு எதிராக அந்த இமயமலையில் உண்டாகிற ஓசையைக் கேட்டுக்கொண்டும், வேடர்கள் ஒருவரோடொருவர் யுத்தஞ் செய்வதால் உண்டாகிற தொனியைக் கேட்டும், காட்டுத்தீப் பற்றியெரிகிற ஆரவாரத்தைக் கேட்டும் அருச்சுனன் வழி நடந்து, சிவபெருமான் பார்வதியுடனே எழுந்தருளியிருக்கிற புண்ணியமலையாகிய ஸ்ரீகைலாசத்தை அடைந்தான்.

அருச்சுனன், சிவபிரானை வெளிக்கண்ணால் பார்க்காதவனாய் உட்கண்ணாகிய நெஞ்சினால் தான் தரிசித்துத் துதித்து, அந்த மலைச்சாரல்களிலெல்லாம் இருந்து மற்றவர்களால் செய்வதற்கு அருமையான தவத்தைச் செய்கிறவர்கள் சமாதானஞ்சொன்னதனால், கடவுளைப் பிரத்தியக்ஷமாகக் காணாமையாலாகிய துன்பத்தை ஒழித்து, அவ்விடத்தில் உண்மையான தவத்துக்கு உரிய விரதங்களை அநுஷ்டிப்பவனானான். திரிபுரசங்காரஞ்செய்தருளிய சிவபிரான் உமாதேவியுடனே எழுந்தருளியிருக்கிற ஸ்ரீகைலாசகிரியின் மகிமையை அளவுபடுத்திச்சொல்வது எப்படி? அம்மலையைச் சூரியன் முதலியவர்கள் நாள்தோறும் தாங்கள் மேன்மையடையும்பொருட்டுப் பிரதக்ஷிணம்பண்ணிவருவார்கள். அமிருதத்தையுண்ணும் மற்றைத்தேவர்களும் பிரதக்ஷிணம்பண்ணிவந்து பக்தியுடனே துதிப்பார்கள். உயர்ந்த ஸ்ரீகைலாசகிரியின் குகைகளிலெல்லாம் அருவிநீர்வெள்ளம் உருகினவெள்ளிபோல விழுந்துகொண்டிருந்தது. அது, பரிசுத்தனாகிய சிவபிரானது திருச்சடையிற்பொருந்திய சிறந்த கங்காநதிபோலக் காணப்பட்டது. நீராய் உருகுகிற பனிக்கட்டிகளையுடைய பெரிய இமயமலையிலுள்ள பிரகாச

மான பனிக்கு உரிய தெய்வம் இங்கே வந்து பொருந்திற்று என்று சொல்லும்படி, வெள்ளிமலையாகிய ஸ்ரீகைலாசம் காணப்பட்டது.

வெண்ணிறத்தையுடைய அப்பெரிய ஸ்ரீகைலாச கிரியின் தென்புறத்தில், அருச்சுனன், குற்றமில்லாத நான்கு வேதங்களிற் கூறிய விதமாகவும், சைவசமயத்துப் பற்பல ஆகமங்களிற் சொன்னவிதமாகவும் ஸ்ரீபஞ்சாக்ஷர மஹாமந்திரத்தைப் பக்தியோடு உச்சரித்துக்கொண்டு, தன் உடம்பு முழுவதிலும் விபூதியைத் தரித்துக்கொண்டான்; அந்தத் திருநீற்றின் மிகுதியைக் கட்டியுள்ள சடையின்மேலே அணிந்தான். "இவ்வருச்சுனன், ஒளியினால், அந்தக் கைலாசமலையின் உச்சியில் எழுந்தருளியுள்ள சிவபிரானையே ஒத்திருக்கிறான்" என்று தேவர்களெல்லோரும் துதித்துப் பேசினார்கள். அருச்சுனன் மேற்கொண்டு செய்யத்தொடங்கிய பெருந்தவத்தின் சிறப்பு யாராலும் சொல்லுதற்குமுடியாது. அருச்சுனன் ஒருகாலை நிலத்தில் ஊன்றி அதன்மேல் நின்றுகொண்டு, நின்ற அந்தக்காலினுடைய தொடையின்மேல் மற்றொருகாலை ஊன்றவைத்துக்கொண்டு, பரமசிவனைத் தவிர யாதொருவிஷயத்தையும் சிறிதும் நினையாதபடி மனத்தை அடங்கச்செய்து, ஆகாயத்துடனே சூரியனைப் பிடிக்கப் பிரயத்தனப்படுகிறவன்போலக் கைகளை மேலே உயர்த்தி வைத்துக்கொண்டு, தாமரைமலர்போல நீண்ட பெரிய கண்களிரண்டும் இமைக்காமல் சூரியனுடைய ஆயிரங்கிரணங்களையும் பார்த்துக்கொண்டு தவத்தில் உறுதியாய் நின்றான். "தவத்தைச்செய்பவர்களாகிய இராக்ஷசத்தலைவர்களிலும் மனிதர்களிலும் இவ்வருச்சுனனுக்குத் தவத்தில் நிகராவார் யாருமில்லை" என்று எல்லோருஞ்சொன்னார்கள். அருச்சுனன் தனக்கு நான்குபக்கங்களிலும் அக்கினியை மூட்டி வளர்த்துத் தவஞ்செய்தான். அப்பொழுது, அக்கினிதேவன், அவ்

வருச்சுனனது உடம்பைச் சுடாமல், குளிரச்செய்கிற நீரைப் போல இருந்தான். இவ்வருச்சுனனுக்கு மணமாலையைச் சூட்டி இவனை விவாகஞ்செய்துகொண்ட திரௌபதி தோன்றியது எம்மிடத்திலே என்று எண்ணிய காரணத்தாலோ? நான்கு வெள்ளைக்குதிரைகளையும், பொன்மய மான ரதத்தையும், பகைவர்களைக் கொல்லுதலால் யமனை ஒத்த கொடிய காண்டீவமென்னும் வில்லையும், அம்பறாத் தூணியையும், வில்நாணியையும், குரங்கினுருவத்தைையெழு திய பெரிய கொடியையும் முன்னே காண்டவதகனகாலத் தில் நாம் இவனுக்குக் கொடுத்தோம் அன்றோ? என்று நினை த்த காரணத்தாலோ? நமக்குச் சிநேகிதனாகிய காற்றோடு விரைவாக நாம் போய் உண்ணும்படி காண்டவமென்னும் வனத்தை நம் பசியை ஒழிப்பதற்கு இரையாகக் கொடுத்த வீரன் இவன் என்று நினைத்த காரணத்தாலோ? அக்கினி அருச்சுனனைச் சுடவில்லை. சிவரூபமான வலதுபக்கம் அழகான பவழத்தின் சோதிபோலச் சிவந்திருக்கவும், பார் வதீரூபமான மற்றொரு [இடது] பக்கம் பிரகாசமான நீல ரத்தினத்தின் ஒளிபோலக் கறுத்திருக்கவும், இப்படி ஆண் வடிவமும் பெண்வடிவமும் கலந்ததான திருமேனி, அணி ந்துகொண்டுள்ள விபூதியால் பிரகாசமான முத்தின் ஒளி போல் வெளுத்திருக்கவும், பார்வதீ தேவியுடனே ஸ்ரீகை லாசகிரியிலே எழுந்தருளியிருக்கிற பரமசிவனுடைய திரு வுருவத்தை, அருச்சுனன் மனத்தால் தியானஞ்செய்து கொண்டிருந்தான். அப்பொழுது, அவன்மனத்திலுள்ளே விளங்குகின்ற சிவத்தியானம், ஆனந்தக்கண்ணீர்சொரிதல் மயிர்ச்சிலிர்ப்பு முதலியவைகளால் வெளியே தோன்றிற்று. சிவானந்தத்தால் அவனுடைய மார்பும் தோள்களும் பூரித் தன. தவநிலையில் சலியாமல் உறுதியாய்நின்ற அருச்சுன னுடைய உடம்பை, பெண்யானைகளும், யானைக்கன்றுகளும், ஆண்யானைக்கூட்டங்களும், கறுப்பாயும் பலமாயுமிருக்கின்ற

தொரு துறுகல்லென்று நினைத்து உடன்பொருந்தி உராய்ந் தன; பாம்புகள், கறையான் வந்தேறித் தங்குகிற குகை போன்ற புற்றென்று நினைத்து மேலே ஊர்ந்தன; பூக்களை யுடைய கொடிகள், மரமென்று நினைத்து நான்குபக்கங்களி லும் சுற்றிக்கொண்டன. வெயில்நாளென்றும் மழைநாளென் றும் பனிநாளென்றும் பாராமல், வருந்தி நெடுங்காலம் சிவ சிவ என்று உச்சரித்துக்கொண்டு அருச்சுனன் தவஞ்செய் தான். பூலோகத்தில் செய்வதற்கு அருமையான தவத்தை முற்காலத்தில் செய்தவர்களில் இந்த அருச்சுனனைப்போல வேறுயார் தவஞ்செய்தார்கள்? இவன்செய்த தவம் அரு மையானவிதமேயாகும். பகீரதன்முதலாகிய எண்ணில்லாத கோடிக்கணக்காகிய அரசர்களும் தவஞ்செய்தார்கள். வலிய இரணியாக்ஷன் இரணியாசுரன் நிவாதகவசர் காலகேயர் முதலாகிய ஆகாயத்திற் சஞ்சரிக்குந்தன்மையையுடையவர் கள் எத்தனையோபெயர் தவஞ்செய்தார்கள். அருச்சுனன் அவர்களைக்காட்டிலும் அதிகமாகத் தவஞ்செய்தான். இவ் வருச்சுனன் தேவர்கள் துதிக்கப்பெற்ற தேவேந்திரனுடைய குமாரன்; சித்திரத்திலும் எழுதமுடியாத அழகுக்கு மன்மதனும் தன்னோடு ஒப்பாகப்பெறுதவன்; எல்லாக் கல்விகளுக்கும் வேறுஉவமைபெறுமல் தன்னோடுதானே ஒப்பவன். இவன் இப்படி கோரமானதவஞ்செய்ய நினைப் பதோ? ஐயோ! என்னபாவம்! இவன் இப்படி தவஞ் செய்து வருந்துவது, முற்பிறப்பிற் செய்யப்பட்டுப் பிற் பிறப்பில் தொடர்ந்துவந்து அடைந்த தீவினைப்பயனே? நல் வினைப்பயனே? அறியோம். சூரியனும், பரமசிவனைக் குறித்து வணங்கிப் பாசுபதாஸ்திரம் பெற்றுப் பகைவரை ஜயித்து இராச்சியத்தைப் பெறும்பொருட்டுத் தவஞ்செய் கிற அருச்சுனனுக்கு, முதிர்ந்த வெயிற்காலமாகிய கோடை யிலும் சந்திரனைப்போலக் குளிர்ந்திருந்தான்; ஏனென்றால், எல்லாவுயிர்களுக்கும் சூரியனின்றிக் கண்ணொளிவிளங்காது.

ஆதலால் உலகங்களெல்லாவற்றிற்கும் கண்ணுயிருப்பவன் இச்சூரியன். கண்ணுக்கு அணிதற்கு உரிய சிறந்த ஆபரணம் தயை தாக்ஷிணியமல்லவா? ஆதலால்தான், உலகங்களெல்லாவற்றிற்கும் கண்ணுயிருக்கிற சூரியன், மிகக் கருணையுடையவனுய், அருச்சுனனைத் தவஞ்செய்யும்பொழுது சுடாமலிருந்தான். அருச்சுனன், இப்படி, பாசுபதாஸ்திரம்பெறவேண்டுமென்கிற தன் எண்ணத்துக்கு ஏற்ற பெரியதவத்தை மேற்கொண்டு, பரிசுத்த புண்ணிய மூர்த்தியாகிய பரமசிவனைத் தான் வேண்டியபடியெல்லாம் பக்தியோடு தியானித்தான்.

அருச்சுனன் பலநாள் இடைவிடாமல், சிவபிரானையொழிய வேறுநினைவின்றி, மனத்தைத் தம்வழியில் இழுக்கும் வலிமையைக்கொண்ட ஐம்பொறிகளையும் அடக்கி, பாசுபதாஸ்திரத்தை வேண்டியவனுய்க் கைலாசகிரியிலே இருந்து செய்கிற சிறந்ததவத்தை, அவன் தந்தையாகிய தேவேந்திரன் அறிந்து, மகிழ்ச்சியால் உடம்பு மயிர்ச்சிலிர்ப்படைந்தான். இந்திரன், பரமசிவனைப் பிரத்தியக்ஷமாகத் தரிசித்தலை வேண்டிய தன் சிறந்த குமாரனுன அருச்சுனனுடைய தவத்தின் நிலைமையைத் தன்குருவாகிய பிருஹஸ்பதி பகவானுடனே அவர் அறியும்படி சொல்லி, அதைப் பரிசோதிக்கும்படி எண்ணுகிறுன் :—“வில்லைக்கொண்டு யுத்தஞ்செய்யும் தொழிலில் வல்லவனுகிய அருச்சுனன் இப்படிப்பட்ட அருமையான தவத்தைச் செய்யவிரும்பியது, பரமசிவனுடைய பெரிய பாசுபதாஸ்திரம் முதலிய பாணங்களைத் தான் பெறுவதற்கு நினைத்துப்போலும். அருச்சுனனது நல்லதவத்தின் உறுதியையும் அவனது கருத்தையும் நாம் முழுவதும் பரிசோதித்து அறிந்துகொள்வோம்” என்று எண்ணுகின்ற மனத்தையுடையவனுய், சிவபிரானுடைய அழகிய கைலாசகிரியை அடைந்து அருச்சுனனது

தவத்தைச் சோதித்து அறிவதற்கு உபாயத்தை ஆலோசித்தான்.

வெண்மையான புன்சிரிப்பையுடைய ஊர்வசியும், அரம்பையும், கொவ்வைப்பழம்போலச் சிவந்த வாயையுடைய மேநகையும், திலோத்தமையும் என்று பெயர்சொல்லப்பட்ட தேவமாதர்களை அழைப்பித்து, அவர்களை நோக்கி, "திருப்பாற்கடலிலிருந்து மான்போலவும் மயில்போலவும் தோன்றிய பெண்களே! நீங்கள் போய் அருச்சுனனுடைய கருத்து உள்ளவிதத்தை உங்களால் ஆனமட்டில் அறிந்து வந்து சொல்லுங்கள்" என்று இப்படி தேவேந்திரன் கட்டளையிட்டுச்சொன்னான். அப்போது, இந்திரனுடைய தேவர்முதலியோர் நெருங்கிய பெரிய சபையில் சிறப்பு மிகுந்தவர்களும் அழகிய உருவமுடையவர்களுமாகிய தெய்வப்பெண்கள், அச்சொல்லை ஏற்றுக்கொண்டு, வணங்கி விடைபெற்று, அருச்சுனன் தவஞ்செய்கிற அந்த இடத்துக்குப் புறப்பட்டுப்போவாரானார்கள். அத்தேவமாதர்கள் மன்மதனைத் தம்முடன் வரும்படி எண்ணினார்கள். எண்ணவே, மன்மதராசனும், சிறந்தமலர்களாகிய அம்புகளையும், இனிய கரும்பாகிய வில்லையும் தன் அழகிய கைகளிலே எடுத்துக்கொண்டு, தன்சேனையாகிய அந்தத் தெய்வப்பெண்களோடு யுத்தத்துக்கு உரிய முறைப்படியே, அருச்சுனன் தவஞ்செய்யுமிடத்திற் பிரவேசித்தான். மன்மதனுக்கு அப்போது அச்சந்தான்; ஏனென்றால், தான் துஷ்டசேஷ்டைகள் செய்ததனால், தன்னைச் சிவபிரான் முன்னொரு காலத்தில் கோபித்து நெற்றிக்கண்நெருப்பினால் எரித்துவிட்டிருக்கிறார். இப்போது அவருடைய பக்தனாகிய அருச்சுனனது தவத்தைக் கெடுக்கவேண்டுமென்னும் கெட்ட எண்ணங்கொண்டு வருகிறதனால், தனக்கு அவர்கோபத்தால் என்னவிளையுமோ என்ற அச்சம் அவனுக்கு உண்டு. ஆனா

னும், அவன் பண்ணும் ஆடம்பரங்களைப் பார்த்தால், அவை, சிவபிரானும் அவனுக்கு அஞ்சுவார் என்று எண்ணும்படி யிருந்தன. அப்போது, மன்மதன், பொதியமலையிலிருந்து வருகிற தென்றற்காற்ருகிய தேரையுடையவனும், 'செவ் வானத்தோடு கூடிய மாலைப்பொழுதாகிய யானையையுடைய வனும், பூர்ணசந்திரனுகிய வெண்கொற்றக்குடையையுடைய வனும், கடலாகிய கொடிப் பேரிகையையுடையவனுமாய், காலத்தையும் சித்திரையும் வைகாசியுமாகிய வசந்தருது வாகச் செய்துகொண்டு, அழகுமிக அருச்சுனனுடன் போர் செய்வதற்கு வந்தான். இளந்தென்றற்காற்றும், மாலைப் பொழுதும், பூர்ணசந்திரனும், கடலொலியும், வசந்தருது வாகிய இளவேனிற்காலமும் முதலியன யார்க்கும் ஆசையை மூட்டுமல்லவா? ஆதலால், இவை, காமத்தை மூட்டும் தேவனுகிய மன்மதனுடைய யுத்தத்துக்கு உரிய உபகர ணங்களாகும். அப்போது, தென்றற்காற்று, சந்தனுசல மென்னும் பொதியமலையில் தோன்றி, சிவபிரானுக்கு எதி ராய், அவருடைய திருமுடியில் இருக்கிற கங்காஜலமும் கமகமவென்று சந்தனவாசனை வீசும்படி வந்தது. பரிமள முள்ள இனிய தளிர்களை வாயாற்கோதிச் சிறந்த பூந்தாது களையும் சிறந்த வாசனையையுமுடைய பூங்கொம்புகளிலெல் லாம் இருந்து குயிலினம் கூவின. அங்ஙனம் கூவ, முன் ஒருகாலத்தில் சம்பராசுரனை வில்லைக்கொண்டு ஜயித்த வீர னுகிய காமதேவனுக்கு முடிசூட்டி, 'சிவபிரானுடைய கோபத்துக்கு அஞ்சவேண்டாம்?' என்று சொல்வதுபோல் வசந்தகாலம் அழகாக வந்துபொருந்திற்று. தேவேந்திர குமாரனுகிய அருச்சுனன் சடைமுடிதரித்து ஐம்புலன்களை யும் ஒடுக்கி அருந்தவம்புரிதலைக் கண்டு, தாமும் அப்படியே செய்யக்கருதியவைபோல, விருட்சங்களும், எல்லாத்திக்குக் களிலும் செந்தளிர்களாகிய செந்தீயை வளர்த்து, சூரியனைப் பார்த்துக்கொண்டு, ஒற்றைக்காலில் நின்று உயர்ந்திருந்தன.

கைலாசகிரியின் மேலும் சாரலிலும் உள்ள குளங்களும் சுனைகளும், அப்போது, அருச்சுனனுடைய மனம்போலவே உள்ளூறக் கலக்கமில்லாமல் தெளிந்து குளிர்ந்திருந்தன. விபூதிதரித்து விளங்குகிற தேகத்தின் நிலாவொளியால் நெஞ்சில் மயக்கமாகிய இருளைப் போக்கி ஐம்புலன்களையும் ஒடுக்கிய மகாதவசியாகிய அருச்சுனன் தவஞ்செய்யும் பொழுது தன்னைச்சுற்றி மூட்டி வளர்த்த பெரிய அக்கினியால், சிவபிரானுடைய கைலாசகிரியிலுள்ள பாறை துறுகல் முதலிய எல்லாம் உருகி ஆறாய்ப் பெருகியோடின; அந்த மலை வெள்ளியன்றோ?

திருப்பாற்கடலில் அமுதத்தோடு பிறந்து சுவர்க்க லோகத்திற் குடிபுகுந்துள்ளவர்களாகிய அழகிய தேவமாதர்கள், அருச்சுனனுடைய தவத்தைக் கெடுப்போமென்று எண்ணி, ஒருவர்க்கொருவர் முற்பட்டு, தம் கொடிபோலும் இடையானது அசைய வந்து, அந்தமலையினிட முழுவதும் நெருங்கப் புகுந்தார்கள். சொல்லால் குயிலும் தோற்றத்தால் மயிலும்போல இருக்கிற அந்தேவமாதர்கள், அருச்சுனன் பஞ்சாக்கினிமத்தியில் உறுதியாய்த் தவஞ்செய்துகொண்டு நின்றதைக் கண்டார்கள். ஆகாயத்தில் தேவர்களுடைய துந்துபியென்ற வாத்தியங்கள் முழங்கவும், மன்மதனுடைய துந்துபி அலைகளின் எதிராக முழங்கவும் அத்தெய்வப் பெண்கள் வந்து, காலில் அணிந்திருக்கும் பொற்சிலம்புகள், இடையில் அணிந்திருக்கும் மேகலாபரணவகைகள், தாமரைமலர்போன்ற கைகளில் அணிந்திருக்கும் வெண்மையான வளையல்கள் ஆகிய இவ்வாபரணங்கள் சத்திக்கப் பந்து அடிப்பார்கள்; அம்மானை யாடுவார்கள்; கழங்கு ஆடுவார்கள்; நெற்றியில் செம்மையான திலகம் இட்டுக்கொள்வார்கள்; இப்படியாகித் தனித்தனி திக்குக்கள்தோறும் சூழ்ந்தார்கள். அவர்கள், முருக்கம்பூப்போலும் சிவந்த தம்வாய்

திறந்து, அங்கே கூவுகிற குயிலோடு எதிராகக் கூவி, கொஞ்சிப்பேசுகிற பச்சைக்கிளிகளைத் தாங்களும் அப்படி கொஞ்சிப்பேசி அழைப்பார்கள். அங்கே மயில்களின் கூட்டம் நிர்த்தனம்செய்ய, தாங்களும், இடைமுதலிய அவயவங்களில் அணிந்திருக்கும் ஆபரணங்கள் ஒளிவீச நடிப்பார்கள். "கைலையங்கிரியின் சாரலோ இது? எங்களுடைய ஊராகிய தேவலோகமாகும்" என்று கூவிக் களிப்பார்கள். அப்போது, அவர்களுடைய ஒலியால், மிகவுயர்ந்த அம்மலையினிடம் முழுவதும் எதிரொலிசெய்தது. அவர்கள், மற்றும், மேகம்போலக் கறுத்த கூந்தலை அவிழ்த்து உடனே முடிப்பார்கள்; வாசனைவீசத் தம்முடம்பில் சந்தனம் பூசிக் கொள்வார்கள்; அழகிய பட்டுவஸ்திரங்களை அவிழ்த்து அவிழ்த்து உடுப்பார்கள்; தரித்த உத்தரீயத்தை அடிக்கடி மாற்றுவார்கள்; பூப்போல் மெல்லிய வஸ்திரம் நனையப் பரிமளமுள்ள சுனைகளில் நீராடுவார்கள்; புழுகு, கலவைச் சந்தனம், பனிநீர் இவைகளை ஒருவர்மேலொருவர் வீசிக் கொள்வார்கள்; வீணைவாத்தியத்தை வைத்துக்கொண்டு, அதன் இசைக்கு ஏற்க ஒத்துப்பாடுவார்கள்; புல்லாங்குழல் ஊதுவார்கள்; ஆசையை மூட்டுகிற சிங்காரமான பேச்செல்லாம் பேசிக்கொண்டுவந்து அணுகுவார்கள்; அமிருதத்தைப் பானம் பண்ணுவார்கள்; கைகளால் மென்மையான மலர்களைக் கொய்து மேலே எறிவார்கள். அந்த ஸ்திரீகள் தங்கள் எண்ணத்தைக் குறிப்பித்துச் செய்த சேஷ்டைகள் இப்படி எத்தனையோ கோடி!

அப்போது, அருச்சுனன், சோலைகளிலும் காடுகளிலும் கசங்களிலும் உள்ள மன்மதபாணங்களாகிய ஐவகை மலர்களும்* மனத்தில் அதிகம் அதிகமாகப் பட்டுப்

* மாமலர், அசோகமலர், மல்லிகைமலர், தாமரைமலர், நீலமலர் என்பன ஐவகை மலர்களாம்.

புதைபவும், ஐம்புலன்வழியே செல்லாமல் தன் தியானத்தின் வழியிலேயே உறுதியாக நின்றான். அவன்மேல் பாணப்பிரயோகம் செய்துசெய்து காமதேவனும் சோர்ந்து விட்டான். தேவேந்திர குமாரனாகிய விசயனும், யமனை உதைந்த சிவபிரான் திருவடியையும், தரித்த யானைத்தோற் போர்வையையும், அணிந்த விபூதியின் பிரகாசம் பரவியுள்ள தனால் சந்திரனொளி தவழும் திருவுருவத்தையும், நிலா வெயில் அக்கினி ஆகிய இம்மூன்றையும் உமிழ்கிற மூன்று திருக்கண்களையும், கங்காஜலம் பரவிய கொன்றைமலர்சூடிய நீண்ட சடையையும் அல்லாமல் மற்றொன்றையும் எண்ணாமல், கண்மூடி மௌனியாகி மலைபோலத் தவத்தில் நிலையாக நின்றான். 'அக்காலத்தில் நாம் சிவபிரான் இருந்த யோகத்தை அறிவில்லாமல் குலைக்கத்தொடங்கி நம்முருவம் வெந்து நீறான கைலாசகிரி இது. தேவேந்திரன் சிற்றின்பவாசையை அடக்கமாட்டாமலன்றோ தன் உடம்பில் விகாரமான ஆயிரங்கண்களையுடையவனானன். அப்படிப்பட்டவன் சொன்னசொல்லை நம்பி அவன்குமாரன் செய்கின்ற தவத்தைக் கெடுத்தால் என்னதீங்கு நேர்ந்திடுமோ?' என்று அஞ்சி மன்மதன் அங்கே நிற்காமல் ஓடினான். பரமசிவனது நெற்றிக்கண் நெருப்பினால் நீறுபட்டிருப்பவன் நிற்பானா? தேவராஜனான இந்திரனது கட்டளையால் வந்த தேவதாஸ்த்ரீகளும், தம்மாலான அந்தக் கிரீடைகளெல்லாம் செய்தும் ஒருபயனும் பெறாமல் அவ்விடம்விட்டுத் தம்முலகம்போய் விட்டார்கள். அங்கே காட்டினிடம் முழுதும் பரிமளத்தைப் பரப்பி வண்டுகள் ஸங்கீதம்பாடும்படி வந்த அந்த இளவேனிற்காலமும் போய்விட்டது. சூரியனும் மேற்குத் திக்குச்சமுத்திரத்திற் குளித்து அஸ்தமித்தான். இந்திரஜாலமென்னும் மகாமாயவித்தையைப்போலப் பிறர்மனத்தை மிகமயக்கும்படி இந்திரனால் ஏவியனுப்பப்பட்ட தெய்வமகளிர் எல்லோரும், இந்திரனுடைய குமாரனாகிய அருச்சு

னனது கருத்து இன்னது என்று நன்றாக அறிந்துகொண்டு தேவலோகத்துக்குச்சென்று, இந்திரனுக்கு,மன்மதனுடனே அருச்சுனனை அடைந்ததையும், அவனை மயக்கித் தவத்தைக் கெடுக்கும்படி தாம் பற்பலமுயற்சிகள் செய்ததையும், அவை களெல்லாம் சிறிதும் பயன்படாமல் தாம் மீண்டு வந்து விட்டதையும் சொன்னார்கள்.

அந்த இந்திரனும் தன் குமாரன் தவஞ்செய்யுமிடத்தை அடைந்தான். தேவேந்திரன் கிழத்தனமுள்ள ஒரு பெரிய முனிவனுடைய உருவமாய் மாறி வந்து, விசயனைப் பார்த்து, 'உன்னுடைய எண்ணம் என்ன? நீ தவஞ்செய்கிற காரணம் யாது?' என்று கேட்க, மேன்மையான சிவத்தியானம்செய்கிற கருத்தோடு அக்கினியின் மத்தியில் நின்று தவஞ்செய்கின்ற அருச்சுனனும், இந்திரன் தன்னுடைய உருவம்மாறி வந்திருக்கிறவிதத்தை அறியாதவனாய், 'அர்த்தநாரீசுவரராகிய பரமசிவன் என்முன் எழுந்தருளிப் பிரதியக்ஷமாகும்வரையிலும் இந்தத்தவத்தை விடாமற் செய்வேன்' என்று சொல்ல, இந்திரன் அதற்கு எதிராக, 'குற்றமில்லாத தேவர்களுக்கும் அருமையான வேதங்களுக்கும் அறிதற்கு எட்டாத ஒளியுருவமான சிவபெருமான் உன்னுடைய தவத்துக்குப் பிரதியக்ஷமாவாரோ?' என்று சொல்லிச் சிரித்தான். அதற்கு விசயன், 'முனிவனே! நீ நகைத்தது எக்காரணம்பற்றி?' என்று கேட்டான். இந்திரன் மறுபடியும் தன் குமாரனை நோக்கி, 'இந்தப் பெரிய தவம், வருத்தந்தருவது மாத்திரமேயல்லாமல், நீ நினைத்த பயனைத் தருவதாகாது' என்று சொன்னான். அதுகேட்ட அருச்சுனன், தன் உத்ஸாஹத்தைக் கெடுக்கவந்தானென்று கோபித்து, இந்திரனைப்பார்த்து, 'என் உயிர் நீங்கும் வரையில் இக்கருத்தை நான் விடமாட்டேன்' என்று சொன்னான். மைந்தன் இவ்வார்த்தையைச் சொல்ல, தந்தையான

இந்திரனும், மனம் மிகவும் மகிழ்ந்து, கிழமுனிவனுன உருவத்தை ஒருகணப்போதில் மாற்றித் தேவேந்திரவடிவமாய் அவனெதிரில் நின்று, அவனை நோக்கி, 'இந்தப் பெரியதவங் காரணமாகப் பரமசிவன் உனக்குப் பிரதியக்ஷமாகிப் பாசுபதாஸ்திரத்தைக் கொடுப்பான்' என்று சொன்னுன்.

என்று இப்படி சொல்லித் தேவேந்திரன் போன பின்பு, பரிசுத்தமூர்த்தியாகிய பரமசிவனுடைய திருவடிகளைத் தியானிக்கிற மனத்தையுடையவனுய் நிலைபெற்று நல்லதவத்தைச்செய்கிற மேன்மைக்குணத்தையுடைய அவ் விசயனது தன்மை முழுவதையும் உமாதேவியார்க்கு அவளுடைய தோழிமார்கள் போய்ச்சொன்னுர்கள். பார்வதிதேவியும், அருச்சுனன்தவத்தைத தோழியர் சொல்லக் கேட்டறிந்து, சிவபிரானுக்கு அடிதொழுது அருச்சுனன் தவநிலையை அருளிச்செய்தாள். உமாதேவி அருளிச்செய்த சொல்லைக் கேட்டுச் சிவபெருமானும் திருவுள்ளம் இரங்கித் தேவியாரை நோக்கி அருளிச்செய்வார் :—

'பிரியையே! அருச்சுனனுடைய தவம் நெடுங்காலமாக உள்ளது. அவன், தமைய மிகுந்த தருமபுத்திரனுக்கும் வாயுகுமாரனுன வீமனுக்கும் நேர் இளையவன். ஸ்ரீமந் நாராயணனுடைய திருவவதாரமூர்த்தியாகிய கண்ணபிரானுக்குப் பிராணசிநேகிதன். அவன் நரன் என்னும் பெயரையும் பெற்றவன். திருதராஷ்டிரனுடைய மக்களாகிய துரியோதனுதியர்கள் வஞ்சனையால் ஆடின சூதாட்டத்தில் தோற்றுக் காட்டில் தாங்கள் வாசஞ்செய்யவேண்டுங் கடமையை யுடையவர்களாகிய அப்பாண்டவர்களில்,தேவராஜனுன இந்திரன் பெற்ற மைந்தனுகிய அருச்சுனன், மிகவும் பெரிய யுத்தத்தில் பகைவர்களாகிய துரியோதனுதியரைக் கொல்ல வேண்டுமென்னும் எண்ணமுடையனுய், அக்கினிமத்தியில்

நின்று நம்மைக்குறித்தே அருமையான தவஞ்செய்கிறான். இதை நாம் நீ சொல்வதற்கு முன்னாகவே அறிவோம். அவன் நீரைக்குடிப்பதையும் விட்டுக் காற்றையும் வெய்யிலையும் மரங்களினுடைய கிளைகளிலிருந்து தாமே உதிர்ந்த உலர்ந்த இலைகளையுமே ஒழியவிட்டுக் காய்கள் பழங்கள் கிழங்குகளையும் இனிமையாக உண்ணுதலைத் தவிர்ந்தான்; பக்திமிகுதியால் நீராய் உருகுகிற சிறந்த மனத்தை நாம் வந்து இருப்பதற்குத் திவ்யமான ஸ்தானமாகச் செய்து நம்மிடத்திலே அறிவைச் செலுத்தினான். இவ்வருச்சுனன் போலத் தவஞ்செய்தலிற் சிறந்தவர்கள் வேறுயார் இருக்கிறார்கள்? இனி நான் சொல்வதைக் கவனித்துக்கேட்பாயாக:—அருச்சுனனை உடன்பிறந்தவர்களோடுகூடக் காட்டிலே வாசஞ்செய்யும்படி அனுப்பி ஒதுக்கிவிட்டுத் தன் தம்பிமார்களும் தானுமாகக் கொடிய சூதாட்டமாகிய வஞ்சனையினாலே அபகரித்துக்கொண்ட குருநாட்டிலே துரியோதனன் வாழ்கிறானன்றோ? அவனுடைய ஏவலினால் மூகன் என்னும் பெயரையுடைய அசுரன், இவ்வருச்சுனனைத் தன் கொம்பினாலே குத்திக்கொல்வதற்கு உரிய பன்றியின் உருவமாகி இன்றைத்தினத்தில் இம்மலையிலே வந்துசேர்ந்தான். அம்மூகாசுரன் விரைவாகப் போர்செய்து அருச்சுனனைக் கொன்று அவனுடைய சிறந்த தவத்தை நீக்குவதற்கு முன்னாகவே சீக்கிரமாக நாம் அவ்வசுரனுயிரைக் கவரவேண்டும். அல்லாமலும், அவ்வருச்சுனன் கேட்கும் வரங்களைக் கொடுக்கவும்வேண்டும்" என்று சொல்லித் தம்முடைய ஆசனத்தைவிட்டு எழுந்தார்.

பரமசிவன், தேனால் நனைந்த புதிய மலர்களைத் தம்முடைய திருவடிகளில் இட்டு அருச்சித்து வணங்கித் தம் முன்னே பயபக்தியோடு நின்ற நந்திகேச்வரர்மேலே தம் திருக்கண்களை வைத்து நோக்கியருளி, 'நாம் இப்பொழுதே

வேடராகி, தீங்குசெய்வதிற் பிரவேசித்திருக்கிற பன்றியைக் கொல்லும் வேட்டையை ஆடவேண்டும். ஆதலால், அந் நினைவிற்குத் தகுதியாக இக்கணத்திலேயே நம்முடைய கணத்தோடு நீயும் அவ்வேடவடிவத்தை எடுத்துக்கொள் வாயாக' என்று கட்டளையிட்டு, உடனே, தானும் தன்மனைவி யும், வேடர்குலத்திற்பிறந்த ஒருகணவனும் ஒருமனைவியு மாக வடிவங்கொண்டார்கள். சிவபிரான் கட்டளையிட்ட பொழுதில், நந்திகேச்வரர் விரைவுடன் முதலில் யமனை உதைத்த சிவபிரானுடைய இரண்டு திருவடிகளையும் வணங் கிப் பின்பு ஐயத்தையுடைய சிவகணத்தலைவர்களுக்குச் சிவாஜ்ஞையைச் சொன்னார். அந்தக்கணநாதர்களும் அவ் வேட வேஷத்தை எடுத்துக்கொண்டார்கள். சிவபெருமா னும், தமது அழகிய சடையைப் பின்னலுள்ள மயிராக மாற்றி, நெருங்கிய மயிலிறகினாற் செய்த நீண்டமாலையைத் தம் அழகிய நெற்றியிலே பொருந்தச் சுற்றி அணிந்தார்; நீலரத்தினம்போலக் கறுத்த தம் கழுத்திலே நிலவுபோன்ற ஒளி உண்டாகும்படி பலகறைகளாலாகிய ஆபரணத்தை நிறையத் தரித்துக்கொண்டார்; முன்னே அழகிய இரத்தி னங்களைப் பதித்துச்செய்த குண்டலங்களைக் காட்டிலும் சிறந்த குண்டலங்களாகும்படி, தொடுத்த சிலமலர்களை எடுத் துக் காதிலே சாத்திக்கொண்டார்; புலித்தோலையும் அழ கிய இடையிலே ஆடையாக நன்றாக இறுக்கிக்கட்டிக்கொண் டார்; சிவந்த பசும்பொன்னாபரணங்களையணிந்த இரண்டு திருவடிகளிலும் செருப்பை அணிந்துகொண்டார்; சிவந்த தம் அழகிய வடிவம் மிகவும் கரியவரானார். சிவபிரான் தாமரைமலர்போன்ற தம் இடக்கையில் கட்டுப்பொருந்திய வில்லும், தாமரைமலர்போன்ற தம்வலக்கையில் அம்பும், முதுகிலே பாணங்களை உள்ளே அடக்கிவைத்துள்ள புலித் தோலாலாகிய அம்பறாத்தூணியும் மிகவும் அழகாக இருக்க வும், கண்டவர்கள் அஞ்சும்படியாகவும் விரைவாக எடுத்துக்

கொண்ட வேடவேஷத்தை ஆரம்பித்துச்சொல்ல நினைத்தால், ஈராயிரம்நாக்குக்களையுடைய ஆதிசேஷனுக்கும் சொல்லக்கூடுமோ? கலைகள்குறைந்த பிறைச்சந்திரனுடைய கிரணமும், பல நிறமுள்ள மயிலிறகும், பொன்னிறமுள்ள கொன்றைமலர்களினாலாகிய திவ்வியமான அழகிய மாலையும் பொருந்தித் தொங்குகிற சிவபிரானுடைய சிவந்தசடையின் அழகை யார் சொல்லவல்லவர்கள்? செந்நிறமுள்ள சிவபிரானது முதுகில் தொங்குகிற அந்தத் திருச்சடை, பொன்மயமான மேருமலையின் சிகரத்தினின்று அதன் அடிவரையில் பலநிறமுள்ள இந்திரவில் என்ற வானவில்லானது வளைவில்லாமல் அழகாக நிமிர்ந்துநின்றதைப்போல் இருந்தது. பார்வதிதேவி தன் அழகிய மார்பில் குன்றிமணிகளைக்கோத்த ஆரத்தைத் தரித்தாள்; சிவந்த கைகளில், வரிசையாக வளையல்களையும், புலிப்பல் கோக்கப்பட்டுப் பிரகாசம்வீசுகிற மங்கல ஆபரணங்களையும் அணிந்துகொண்டாள்; தனது நீலநிறமாகிய திருமேனியில், பரிமளமுள்ள அகிற்கட்டையின் தேய்வினாலாகிய பூச்சும், மரத்தின் தழைகளைப் பரப்பினதாலாகிய அழகிய சேலையும் தரித்துக்கொண்டாள். வேடப்பெண்கள் கூட்டங்கூட்டமாய்த் தன்னைச்சுற்றி நிற்கும்படி அவள் வேடச்சிவேடமெடுத்து நின்ற வடிவழகிற்கு வேறுநிகர் உண்டோ? மஹாவிஷ்ணுவாகிய ஒரு பன்றி தன்னைத் தேடாநிற்க அதற்குக் காணக்கூடாதபடி மறைத்தருளிய இரண்டு திருவடிகளையுடைய ஒப்பற்ற பரமசிவன், அருச்சுனனோடு போர்செய்யவருகிற மூகாசுரனாகிய அந்தப்பன்றியைத் தேடிக்கொண்டு வேடர்களாகிய பிரமதகணங்களுடனே வேட்டைக்குப் புறப்பட்டார். உமாதேவியும், மலைக்கு உரிய தெய்வமாகிய சுப்பிரமணியக்கடவுளாகிய குழந்தையையும் சிவந்த கையிலே எடுத்துக்கொண்டு, பூமியிலுள்ளவர்களும் மற்ற உலகங்களெல்லாவற்றிலுமுள்ளவர்களும் வணக்கத்தோடு துதிக்கும்படி, தன் கணவன்பின்னே

வந்தாள். எல்லோருக்கும் தலைவராகிய சிவபெருமானுடைய கட்டளையினால், எல்லையில்லாத வேதங்களெல்லாம் நாய்களாய்ப் பக்கங்களிற் சுற்றிவந்தன. அநேககோடிகணநாதர்கள் வேடர்களாகிப் பக்கங்களில் வந்தார்கள். அப்போது அளவற்ற சகலகணங்களும் திரண்டு சஞ்சரிப்பதனால், 'இந்தப்பூமியை இனிமேல் ஆதிசேஷனால் சுமக்கமுடியாது; முடியாது' என்று தேவர்கள் சொன்னார்கள்.

சிவவேடன், எல்லையில்லாத பெரிய பலவகைகளால் காடுமுழுவதிலும் தன்கண்களைச் செலுத்திப் பன்றியின் கால்களின் அடையாளத்தை அது வந்தவழியை அறியும் பொருட்டுப் பார்த்தருளினார். மூகாசுரன் இவ்வருச்சுனன் மேலே முந்திப்பாய்ந்து இவனுயிரைப் போக்கிவிடுவானோ என்ற கவலைச்சிந்தையைச் சிவவேடன் கொண்டு, அவ்வருச்சுனன் தவஞ்செய்கிற பாக்கியபூமியை நோக்கி, அன்போடு ஒப்பில்லாத வில்லையும் வளைத்துக்கொண்டு சென்றருளினார். சென்றவளவில், அப்பன்றி, சிவவேடனால் பார்க்கப்பட்டு மூர்க்ககுணத்தோடு, அருச்சுனதவசியின்மேல் நெருங்கிவந்தது. தினந்தோறும் மரங்களினின்று உதிர்ந்த உலர்ந்த சருகுகளை உண்ணுவதேயல்லாமல் வேறு உணவு இல்லாத அருச்சுனன், தன்மேல் அதிர்ந்துவருகிற பன்றியைப் பார்த்து, தன் அருமையான தவத்தை அது அழிக்குமென்று நினைத்து அஞ்சி, விரைவாகத் தன் ஒப்பற்ற காண்டீவமென்னும் வில்லை வளைத்து, மிகுந்த கோபத்தோடு அப்பன்றியின் முகத்திலே புதையும்படி அம்பெய்தான். சிவவேடனும், ஓசையின் மிகுதியால் உண்டான அதிர்ச்சியால் உலகவுருண்டை வெடிக்கும்படி வில்லின்நாணியைக் கைவிரலால் தெறித்துக் குணத்தொனிசெய்து, அவ்வருச்சுனதவசியின் அம்புக்குமுன்னே அப்பன்றியின் முதுகுபிளக்கும்படி ஒரு பாணத்தைப் பிரயோகித்தார். சிவவேடனும் விசயத்தவசி

யும் எய்த அம்புகளிரண்டும் ஒரேகாலத்திற் பட்டுத்தைத்து அதனுடம்பைத் துளைத்தன. அதனால் பன்றி இறந்து விழுந்தது.

அப்போது, கண்ட பிராணிகளெல்லாம் அஞ்சும்படி காடுமுழுவதிலும் பன்றியைத் தேடிவந்த சிவவேடனது சேனையிலுள்ள வேடர்களெல்லாம் அருச்சுனனைப் பார்த்து, 'ஒருவன் முன்னே குறிவைத்துப் பாணத்தைப் பிரயோகித்திருக்க அந்தக்குறியையே நீ அம்பெய்து துளைத்தது ஒரு சாமர்த்தியமோ? வீரமோ?' என்று சொல்லிக்கொண்டு, அருச்சுனனுடன் போர்செய்யத்தொடங்கினார்கள். அஸ்திரப்பிரயோகத்தில் இராவணாதிராக்ஷஸர்களைச் சங்கரித்தருளிய இராமபிரானை ஒத்த அருச்சுனன், சகல ஆகமங்களாலும் எல்லாவேதங்களாலும் சிறப்பித்துச்சொல்லப்படுகிற பழைமையான தம் திவ்யநிஜரூபத்தை ஒழித்துக் கொடிய வேடனது ரூபத்தை எடுத்துக்கொண்ட கைலாசகிரிக்குத்தலைவராகிய சிவபிரானுடன் சொல்வானானன்:—

"முன்னே பிரயோகித்த என்அம்பு பன்றியின் முகத்தைப் பிளந்து பின்னே முதுகுவழியாய்த் துளைத்துச்சென்றது. நீ பின்னால் விட்ட அம்பு அதன் தலையிலே துளையுண்டாம்படி பிளந்தது. ஆதலால், நீங்கள் இப்படி கொடுமையாகச்சொல்லுகிறது தேகபலத்தாலோ? வில்வல்லமையாலோ? இப்பன்றியின் உடம்பில் என்பெயரை அடையாளமாக எழுதியுள்ள அம்பைப் பார். அது தைத்த இடத்தைப் பார். நீ எய்த அம்பைப் பார். அது தைத்த இடத்தையும் பார். காடுகள்சூழ்ந்த மலையிடமாகிய சிறிய நாட்டுக்குத் தலைவனான வேடனே! நான் அருமையான தவத்தைச் செய்வதனால் எனக்கு உதிர்ந்த சருகேயல்லாமல் வேறுஉணவு இல்லை. ஆதலால், இப்பன்றி உனக்கும் உன்

சேனையிலுள்ள வேடர்களுக்கும் நல்லுணவாகும். ஆதலால், இதை எடுத்துக்கொண்டுபோ. உன்சேனை அல்லது ஆயுதங்களின் பலத்தைக்கொண்டு நியாயமில்லாமல் கோபித்தால், உயர்ந்த திக்குக்களிலெல்லாம் உங்கள் தலை சிதறிச் சிந்தும்படி, நான் கொடிய அம்புகளை விடுவேன்."

என்று விசயத்தவசி சொன்னவார்த்தை காதிற்கேட்டவுடனே, வேடர்களுக்கெல்லாம் அரசனாகிய சிவவேடன் அருச்சுனனைப் பார்த்து, 'தெய்வபக்தியும் ஜீவகாருணியமும் இல்லாதவனே! நீ, பன்றி உக்கிரத்தோடும் ஆரவாரத்தோடும் இன்றைக்கு உன் உயிரைப் போக்கும் என்று மிக்வும் பயப்பட்டாயோ? நிலைநின்று பெரியதவத்தைச் செய்பவர்கள், தாங்கள் இறக்கநேர்ந்தாலும் தாங்கள்கொண்ட நினைவு ஒழிய வேறாகிய ஒன்றை நினைப்பார்களோ? நீ உன்மனச்சாக்ஷியாக அறியச்சொல்வாயாக. சாந்தமான தவவேடத்தை மேற்கொண்டு குரூரமான போர்த்தொழிலை எவரும் செய்யார். பசுவின்தோலை மேலே போர்த்துக்கொண்டு புலிப்பாய்ச்சல்பாய்வார்களோ? நீ பிராமணனோ? ஒற்றை வெண் கொற்றக்குடை நிழலிலிருந்து பூமியை ஆளுகிற அரசனோ? வைசியனோ? வடிவம்மாறிப் பொறுமையோடு தவத்தைச்செய்கிற அசுரர்களும் துஷ்டமனிதர்களும் தேவர்களும் இராக்ஷதர்களும் ஆகிய இவர்களில் ஒரு பகுப்பிற் சேர்ந்தவனோ? தவத்துக்கு உரிய சிறந்த லக்ஷணத்தின் நிறைவோடு, சந்திரனுடைய உருவம்போல நாளுக்கு நாள் உடம்புதேய்ந்து இளைத்து, அக்கினிமத்தியிலே நெடுநாளாகத் தவஞ்செய்து நிற்கிறாய். உனக்குக் குறை என்ன? சொல்' என்று சொன்னான். அதற்கு அருச்சுனதவசியும் தன்வரலாற்றைச் சொன்னான்.

சிவவேடன், அருச்சுனன்சொன்ன சொல்லைக் கேட்டுக்கொண்டு, அவன் வரலாற்றை அறிந்து, மறுபடியும் அவ

னைப் பார்த்து, "குருகுலத்தில்தோன்றிய பஞ்சபாண்டவர்களிலும் வில்லின்தொழிலைக் கற்றவன் நீதானோ? கோபித்து யுத்தத்துக்குவந்த துருபதராசனைத் தேர்க்காலிலே கட்டி மீண்டுபோய்க் குருதக்ஷிணையைச் செய்த சிறுவன் நீதானோ? சிறப்புப்பொருந்திய எங்கள்குலத்தில் தோன்றிய ஏகலவ்வியனென்னும் ஒருவேடனை அவனது வில்லின்திறமையைப் பார்த்துப் பொறாமைகொண்டு அவனது பெரிய கையிலுள்ள விரலொன்றையும் வாங்கினாய். அல்லாமலும், முன்னொருகாலத்தில், முனிவனொருவன் முறையிட்ட வார்த்தையைக் கேட்டு, பல வேடர்களை அர்த்தசந்திரபாணத்தினால் உனக்கு ஒருபயனுமில்லாமல் பிளந்து சங்கரித்தாய். அரசனே! நீ, பசிநோயால் வருந்திவந்த அக்கினிபகவானுடைய கையினின்று, தேரையும், காண்டீவமென்னும் வில்லையும், அம்புகளையும் வாங்கிக்கொண்டு, காண்டவமென்னும் காடுமுழுவதையும் அவ்வக்கினியைக்கொண்டு எரித்த நாளில், ஒரு உயிரைப்போலவே, அசுரர் மிருகங்கள் பக்ஷிகள் முதலிய பலவகைப்பட்ட பிறப்புக்களிற் பிறந்த உயிர்களையெல்லாம்கொன்று, அவ்வனத்தில் மலைகள்தோறும் இருந்த வேடர்களையெல்லாம் சாம்பலாகும்படி கொன்றாய் என்று எல்லோரும் சொல்வார்கள். முன் பலசமயங்களில் வேடர்களுக்கு அபகாரம்செய்ததுமல்லாமல், இன்றும், என்னை முகத்தைப் பார்த்து, தேகபலம் வில்லின்திறமை என்கிற இரண்டிற்கும் இகழ்ந்துபேசினாயே! இரக்கமில்லாமையால் கல்லுக்கு நிகரான மனத்தையுடையவனே! விஜயனென்கிற பெயரை அடைவதற்கு உரிய விசேஷமான ஜயத்தினாலே, மல்யுத்தத்துக்கும், புஜபலத்துக்கும், எப்பொழுதுங் கலங்காத மனோபலமான தைரியத்துக்கும், யுத்தத்துக்கு உரிய அம்புகளை மந்திரங்களுடனே பிரயோகிக்கிற வில்வித்தைதக்கும், உன்னிலும் மேலானவர்கள் இந்தப்பூமியின்மேல் உண்டோ? நீ விஜயனென்னும் பெயரை வைத்துக்கொண்டதற்கும், நீ

பாணங்களை விடுவேனென்று சொன்ன சொல்லுக்கும் அஞ்சி விடமாட்டேன். இப்பொழுது நீயும் நானும் தோள்வலிமையையும் வில்லின் வலிமையையும் நேராகக் காணவேண்டும். என்னசொல்கிறாய்?" என்று சொன்னான்.

வீரனான அவ்வருச்சுனனும், வில்லைவளைத்துக்கொடிய ஒரு அம்பை வேடன்மேலே விட்டான். அருச்சுனன் பிரயோகித்த கொடுமையான ஒரு அம்பைச் சிவவேடன் ஓர் அம்பினால் தடுத்து, அருச்சுனன்மேல் ஒப்பற்ற இரண்டு பாணங்களைத் தொடுத்தான். அவையிரண்டும் போய் விசயத்தவசியினுடைய மார்பையும் தோள்களையும் உடனே ஊடுருவித் துளைத்தன. அப்படி துளைத்தபோது, விசயத்தவசி மறுபடியும் கொடுமையான மூன்று அம்புகளைச் சீக்கிரமாக எடுத்து, மயிலிறகின்மாலையை வட்டமாகச் சுற்றிலும் அணிந்த சிவவேடனுடைய சிரசும் மார்பும் தோளும் ஆகிய மூன்றையுமே இலக்காகக்கொண்டு வலிமையோடு எய்தான். அருச்சுனன் எய்த அம்புகள் தன்திருமேனியில் படுதற்குமுன்னே, அவைகளிற் கட்டியிருந்த இறகுகள் அறுபட்டு ஒவ்வொன்றும் இருதுண்டாய்ப்பிளந்து அவன் குறித்த லக்ஷ்யத்தைப் பொருந்தாதபடி, விரைவாக உக்கிரமான பலத்துடனே மூன்று அம்புகளைச் சிவவேடன் தொடுத்துவிட்டான்; அன்றியும், அருச்சுனன்மேலும் வேறொரு அம்பை எய்தான். இச்சிவவேடன் எளிதாகவும் விளையாட்டாகவும் அம்புதொடுத்தானென்பதை அறியாமல், விசயத்தவசி, சிவவேடன் சிரசில்தரித்த மயிலிறகுமாலை அறுபட்டு அம்முடியிலுள்ள கங்காநதியின் நீர் சிந்தவும், பிறைச்சந்திரனும் அதன்களங்கமாகிய மானும் நிலைகுலையவும் ஒரு அம்பை அவன்முடியின்மேல் எய்தான். இருள்போலச் சிவவேடனைச் சுற்றியிருக்கிற வேடர்களெல்லோரும், தம் தலைவனது சிரசின்மேல் அருச்சுனதவசி அம்பெய்ததை அறிந்

தவளவில், அவன்மேல் யுத்தத்துக்கு எழுந்தார்கள். அப்படி கிளம்பினவளவில், அப்பொழுது, சிவவேடன், அவ்வேடர்களை யெல்லாம், 'நீங்கள் யுத்தத்துக்குக் கிளம்பாமல் நில்லுங்கள்' என்று சொல்லிக் கையமர்த்தி, அருச்சுனனை நோக்கி, 'நீ இப்பொழுது அம்பெய்த விற்போரைக் கண்டோம்! அடடா! உனக்குமுன்னே வில்லைப்பிடிக்கிற தந்திரத்தையும் இதுவரையில் நாம் அறியோம்; வேதமந்திரங்களுடனே செய்கிற வில்லின்போரை, உன்னிடத்திலே இனி நாம் கற்றுக்கொள்வோம்' என்று பரிகாசமாகச் சொல்லி, பின்பு ஓரம்பை அவ்விசயத்தவசியின்மேல் விட்டான். நீர்கொண்ட மேகம்போலக் கருநிறமுடையவனாய் நின்ற விசயத்தவசி, சிவவேடன் தன்மேல்விட்ட அர்த்தசந்திரபாணத்தை வேறொரு அர்த்தசந்திரபாணத்தால் தடுத்து, வில்லை நன்றாக வளைத்து, கூர்மையான அம்புகளைச் சிவவேடன் மேல் மழைபோல மிகுதியாகப் பொழிந்தான். அவ்வம்புகளெல்லாம், பரமசிவரூபமான வேடன்மேல் படாமல், நுனிகள் பூமியிலே அழுந்தும்படி, பலமான வேலி இட்டவிதம் போல அவனைச்சுற்றிலும் விழுந்துவிட்டன. அப்படி விழுந்ததை விசயத்தவசி கண்டு மிகவும் கோபங்கொண்டு சிவவேடன்மேல் வேறொரு அம்பைவிட்டான். விட்ட அம்பு, சிவபிரான் வலிமையோடு பின்பு எய்த அம்பை, நடுவிலே முறியும்படி வெட்டிவிட்டது. அப்படி பிளந்தவளவில், சிவவேடன் கோபித்துப் பல அம்புகளைப் பிரயோகித்தான். அருச்சுனன் அதனால் மிகத்தளர்ந்து, கைகளும் தொடைகளும் நடுக்கமடைந்து, பக்கத்திலே நின்ற ஒருமரத்தின் சமீபத்தைச் சேர்ந்தான். தவத்தையே தனமென்று மேற்கொண்டு செய்யும் அருச்சுனன் இப்படி உடம்பு நடுங்கி அயர்ந்திருக்கிறதன்மையைக் கண்டு தன்பக்கத்திலே நின்ற பார்வதீதேவி சொல்ல, வேடர்தலைவன் மிகுந்தகருணையோடு அவ்வருச்சுனனைப் பார்த்துத் திருவுள்ளமிரங்கி,

இப்போர்க்கு முன்னே தவத்தைச்செய்ததனுலுமுண்டாகிய அவனது இளைப்பு நீங்கும்படி தன்மனத்தில் மிகுந்த அன்புடையவனுப், வெளிக்குமாத்திரங் கோபித்து, எட்டுத்திக்குக்களிலுமுள்ளவர்களெல்லாரையும் ஜயிக்கும்படி அக்கினிதேவனுற் கொடுக்கப்பட்ட அவனது காண்டீவமென்னும் வில்லின் நாண் அறும்படி அம்பெய்தான்.

ஒரு உளுந்து ஒருமுறை உருளும் காலத்தினளவில் தன்வில்லின்நாண் சிவவேடனுடைய அம்பினுல் அற்றுப் போகவே, விசயத்தவசி,வலிமையோடு அச்சிவவேடனெதிரே ஓடி, பலமான தன் வில்தண்டத்தால் அவனது சிறந்தசிரசிலே மோதினுன். அப்படி தாக்கவே, சிவவேடன்சிரசில் மாலையாகப்பொருந்திய மயிலிறகு முடியைவிட்டு நீங்கிற்று; முடியிலுள்ள பிறைச்சந்திரனது அமிருதம் சிந்திற்று; தலையில் அணியும் ஆபரணமாகவுள்ள விஷஸர்ப்பங்களின் உச்சிக்கொண்டையையுடைய தலைகள் பதைத்தன; பதைத்து, அவைகளிலுள்ள மாணிக்கங்கள் சிந்தின; திருமுடியிலுள்ள கங்காநதி, இருப்பிடம்விட்டெழுந்து நிலைகுலைந்து தடுமாறிப் பரந்த ஆகாயத்திற் பொருந்தினுள். இப்படி, வேடனும் இளைத்துத் தன்வசமழிந்து பரவசமடைந்தான். சிவபிரான் அருச்சுனனது வில்லின் தண்டத்தால் முடியில் அடிபட்டபொழுது, அவர் எல்லாவுயிர்களுக்கும் உயிராய் ஸர்வாந்தர்யாமியாய் உலகத்திலுள்ள ஸகலசராசரங்களிலும் நிறைந்திருக்கும் இறைவராதலாலும், அதனுல் உலகமே அவரது சரீரமாதலாலும், பிரமதேவனும் மஹாவிஷ்ணுவும் தேவேந்திரனும் முதலியவர்களாகிய மேலுலகத்தில் வசிக்கிற தேவஜாதியார்களில் அவ்வடியைப்படாதவர்கள் யார்? மனுக்கள் முதலியவர்களாகிய பூலோகத்தில் வசிக்கிற மனிதர்களில் அடிபடாதவர் யார்? ஸர்ப்ப ராஜனுகிய ஆதிசேஷன் முதலியவர்களாகிய பாதாளலோகத்தில் வசிக்கிற

நாகர்களில் அடிபடாதவர்கள் யார்? கணக்கில்லாத மிருகம் பக்ஷி ஊர்வன நீர்வாழ்வன முதலிய இன்னும்பல பிறப்புக்களிலும் தாம் தாம் இருந்த இருந்த இடங்களில் எவை அடிபடாதவை? பிறப்பும் இறப்பும் இல்லாமல் எக்காலத்தும் நித்தியமாகவுள்ளவரும், பார்வதிதேவிக்குக் கணவரும், குற்றமில்லாதவரும் ஆகிய சிவபெருமான், அடியவனுக்கு எளியவராய், யுத்தஞ்செய்யும் வேடவடிவத்தைக் கொண்டு, விசயத்தவசியின் கையினால் அடிபட்டபொழுது, வேதங்கள் அடிபட்டன; விரிவாயுள்ள பல ஆகமங்களின் வகைகள் அடிபட்டன; நிலம் நீர் தீ காற்று வானம் என்னும் ஐந்து பூதங்களும் அடிபுண்டன. விநாழிகை முதலாகச் சொல்லப்படுகிற பொழுதுகளும், தாவரப்பொருளின் வகைகளும் அடிபுண்டன.

பராக்கிரமமுடையவனாகிய விசயத்தவசி வேடச்சி வடிவமான உமாதேவி மிகவும் அஞ்சும்படி அழகிய சிவவேடனது பொன்னொத்த அருமையான திருமேனியில் இப்படி அடித்ததை அச்சிவவேடன் பொறுக்காமல், மல்லயுத்தஞ்செய்யும்படி எண்ணினான். உள்ளங்கால்களும், விரல்களின் நுனிகளும், புறங்கால்களும், காற்பரடுகளும், கணைக்கால்களும், முழங்கால்களும், தொடைகளும், வயிற்றின்கீழிடமும், வயிறும், மார்பும், வலியதோள்களும், சிவந்தகைகளும், முன்னங்கைகளும், பிடரியும், நெற்றியும், உச்சியும் என்ற இந்த அவயவங்களை ஆயுதங்களாகக்கொண்டு, வேறே ஆயுதமெடுக்காமல், சிவவேடனும் விசயத்தவசியும் மற்போரைத் தொடங்கிச்செய்தார்கள். இப்படி கோபித்து மற்போரைச்செய்ய, அதனால், திக்குக்களும், பெரிய பூமியும், மேலுலகமும் அதிர்ந்து சுழன்றன. அப்பொழுது, சிவவேடன், கோபித்துத் தனது திருவடிமலரால் விற்போரில்வல்ல இளவீரனை விசயத்தவசியை ஆகாயத்தில் வீசினான். அருச்சுனன் தேவ

லோகத்தைச் சமீபிக்கும்படி விசையோடு மேகம்போல் ஆகாயத்தில் எழும்பிப் பூமியிலே விழ்வதற்குமுன்னே [மிகவிரைவில்], தன் பரந்தமார்பையேயன்றி முதுகைக்காட்டாதவனும், பரிசுத்த மூர்த்தியான சிவபிரானது உருவமாகிய வேடர் தலைவன் தன்னைக்கண்டு களித்து மனம் உருகும்படி முன்னே நின்று, ஆரவாரத்தோடு, முன்செய்த மல்லயுத்தத்தை மீண்டும் செய்ய நினைத்து எதிர்ப்பவனானான்.

அச்சமயத்தில், பகைவர்களுக்குக் கொடிய பிரமத கணங்களுக்குத் தலைவர்களும், தேவர்முதலியோரும், பிரமனும், சிவயோகிகளும், சூரியனும், குபேரனும், கின்னரர்களும், சித்தர்களும், பல சாரணர்களும், மஹாவிஷ்ணுவும், இந்திரனும் என்கிற இவர்கள் தன்னைச்சூழ்ந்து நிற்கும்படி, பரிசுத்தமாகிய ரிஷபத்தின்மேல், எல்லாவொளிகளினும் மேலானதொரு ஒளியுருவம், பச்சைமயில்போலும் சாயலையுடைய உமாதேவியின் உருவமான இடப்பக்கத்தோடு தோன்றிற்று. அது வணங்குதற்கு அருமையானது. அநேககோடி வேடர்கள் கைவில்லோடு தம்மைச்சுற்றிலும் வரவும், இளைய மயில்போன்ற சாயலையுடைய பார்வதிதேவி தமக்குப்பின்னே வரவும், தெய்வத்தன்மையுடைய வேதங்களின் வடிவமான நாய்கள் தம்மைப் பின்தொடர்ந்துவரவும் எதிர்வந்து போர்செய்த அழகிய சிவவேடனது திருமுடியின்மேல், சைவாகம நூல்களின் விதிப்படியே சிறந்த தேவர்களும் முனிவர்களும் குளிர்ந்த மலர்களையும் அறுகம்புல்லையும் சாத்த அதனால் அத்திருமுடியில் விளங்குகிற புதிய பூக்களையெல்லாம், உண்மையே உருவமெடுத்துவந்தாற்போன்றவனாகிய பெரிய அவ்விசயத்தவசி தன் இரண்டுகண் மலர்களையும் பரப்பிப் பார்த்து, சிவபிரானென்று நிச்சயமாயறிந்து மகிழ்ந்தான். பின்பு, தும்பைப்பூவினாலாகிய பல வகைப்பட்ட மாலைகளும், வில்வபத்திரங்களும், கொன்றை

மலர்களும், மாந்தளிர்களும், அறுகம்புற்களும் வாசனை வீசப்பெற்ற பவழம்போலச் சிவந்த சடையின்மேல் சந்திரனையும் கங்காநதியையும் தரித்தருளிய சிவந்த பொன்மயமான மகாமேருகிரியை ஒத்தவனாகிய பரமசிவன் சிறந்த வீணையின் இசையுடனே தும்புருவும் நாரதனும் மனமுருகிக் கீதத்தைப் பாடாநிற்க, கருணைமிகுந்த உமாதேவியுடனே விருஷபவாகனத்தின்மேல் பிரகாசமாக எழுந்தருளித் தரிசனந்தந்துநின்ற திருக்கோலத்தை அருச்சுனன் கைகூப்பிப் பக்தியோடு தொழுது ஆசைமிகுந்து ஆனந்தத்தால் கூத்தாடினான்; மிகக் களித்தான்; அயர்ந்து பரவசமாய் ஆசைவற நின்றான்; ஓடினான்; குதித்தான்; மனமுருகி மயங்கினான்; பாடல்பாடினான்; பதைத்தான்; பவழம் போற் சிவந்த சிவபிரானது திருமேனியை நாடினான்; உடல் நடுங்கினான்.

"ஸ்வாமீ! கடப்பதற்கு அருமையான கருமங்களால் தாழ்வான பிறப்புக்களிலே வீழ்ந்து நாயைக்காட்டிலும் கடைப்பட்டு வருந்துகிற அடியேனது எதிரில் எழுந்தருளித் தரிசனந்தந்த இச்செயல் என்ன ஆச்சரியமோ! எல்லாவற்றிற்கும் ஆதியே! உலகவுருண்டைகளும் அவைற்றிலுள்ள ஸகலசராசரப்பொருள்களுமாகி விளங்குகின்ற சோதியே! கொன்றைமலர்மாலையைச் சூடிய பரமனே! மரகதரத்தினமயமான பூங்கொடிபோன்ற உமாதேவியைப் பாதிபாகத்திலுடையவனே! வலப்பாகம் பவழமயமான திருவடிவமுடையவனே! எல்லாம் உணர்பவனே! ஸர்ப்பாபரணனே! ஐயனே! சிவந்த திருவடிகளைச் சரணமடைந்த அன்பர்களுக்கெல்லாம் மெய்யனே! எங்குமாய் விளங்குகிற மூர்த்தியே! உன்னுடைய மூன்று திருக்கண்களும், நிலவொளி வெளிப்படும் புன்சிரிப்பும், திருமுகமண்டலமும், விளங்குகிற சடையும், தாயாகிய பார்வதீதேவி வசிக்கப்

பெற்ற செம்மையான திருமேனியும் சிறந்து வாழ்க. பொன்னைத்த அருமையான திருமேனியை யுடையவனே! உயிர்களிடத்தில் அன்புமிகுந்த தருமபுத்திரனுக்குத் தம்பியானேன்; சிறந்த பரம்பொருளாகிய கண்ணபிரானுக்கு நண்பனுமானேன்; உன்னையும் தரிசித்து வணங்கப்பெற்றேன். என்னுடைய பெருந்தவப்பயனை வேறே யார் பெற்றார்?" என்று சொல்லித் துதித்தான்.

இவ்விதமாக விசயத்தவசி சொல்ல, சிவபிரான், சிறந்ததவத்தைச் செய்த அருச்சுனனைத் தழுவிக்கொண்டார். எப்பொழுதும் அழிதலில்லாமலும் நீங்குதலில்லாமலும் இயற்கையாகப் பொருந்திய சோதியையுடைய சிவபெருமான், குளிர்ந்த அருளைப்பொழிகிற திருக்கண்களையுடையவரும், அருச்சுனனைக் காத்தருளவேண்டுமென்கிற திருவுள்ளத்தையுடையவருமாய், அவனை அணைத்துக்கொண்டு, அருமபெருந்தவஞ் செய்ததனாலுண்டான இளைப்பையும் அவனது மிகுந்த துன்பங்களையும் போக்கி, பழுதில்லாத சில சொற்களைச் சொன்னார்; துரியோதனனியால் உண்டான அவனது துன்பத்தையும், தன்னை அடித்ததனாலாகிய அச்சத்தையும் அகற்றி, அவனைத் தேற்றினார்.

"சூதாட்டத்தில், உங்கள்பொருள்களெல்லாவற்றையும் தோற்றதனால் இழந்து, நீங்கள் ஐவரும், காட்டில், தரித்திரர்போல இளைத்து வாடினீர்கள். நீ, நல்வழியிற் செல்லவொட்டாமல் வருத்தந்தருகிற ஐம்புலன்களை அடக்கி இந்நிலவுலகத்தில் தவத்தைச் செய்தவிதம், இப்படிப்பட்டதென்று நினைப்பதற்கும் அருமையானது. மூகனென்னும் பெயருடைய மூடனான அசுரன், நாகக்கொடியவனான துரியோதனன் சொன்ன வார்த்தையால், தவஞ்செய்கிற உன்னுடைய உயிரை ஒழிக்க எண்ணிப் பன்றியாகி உக்கிரத்

தோடு விரைவாக வந்தான். வீரனே! அந்த அசுரன் வந்து உன்னைக் கொல்ல முந்துவதற்கு முன்னே, நான், உமாதேவியுடன், இந்தமலையில் வாசஞ்செய்கிற வேடவேடமாய், வலிய அவ்வசுரனை அம்பினால் வீழ்த்தினேன். உன்னுடனே யுத்தம்செய்து உனது வில்லின்நாணியை அறுத்துவிட்டு, அந்தப் பெரியவில்லின் தண்டத்தால் அடியும் பட்டேன். உன்னுடைய அருமையான மற்போரினால் உதையும்பட்டேன். உன்கருத்து என்ன? நீ கருதிய வரம் யாது? சொல் அப்பா!" என்று சிவபிரான் அருளிச்செய்தார்.

தவத்திற் சிறந்துநின்றவனாகிய அவ்விசயனும், சிவபிரானது திருவடிகளை வணங்கி, 'எனது ஸ்வாமீ! அடியேன் அறியாமற்செய்த பிழைகளைப் பொறுத்தருளவேண்டும். பாரதயுத்தத்துக்குப் பகைவர்கள் இசைந்துவந்தால், அவர்களுடைய உடம்பைச் சிதறடிக்கும்பொருட்டு, உன் திருநாமத்தைப்பெற்ற தெய்வத்தன்மையையுடைய பாசுபதாஸ்திரத்தைத் தந்தருள்வாயாக' என்று விண்ணப்பஞ் செய்தான்.

ஐயனும், அம்மையோடு அருள்புரிந்து, பின்பு, பகைவர்களுக்குப் பயங்கரமான பொன்னாலாகிய அம்புப்புட்டிலையும், வில்லையும், உரியமந்திரத்தையும், பரிசுத்தமான பாசுபதம் என்கிற உண்மையான அஸ்திரத்தையும், அவ்வில்லையும் அம்பையும் பிடிக்கும் விதத்தையும், அதைப் பிரயோகிக்குங்காலத்தில் நிற்கவேண்டிய நிலையுடனே விரைவாக உதவியருளினார். அருச்சுனனும், அவற்றையெல்லாம் வணங்கிப் பெற்றுக்கொண்டான்.

அதன்பின்பு, பரமசிவன், தம்மைச்சுற்றியுள்ள பேய்களும், பூதங்களும், மற்றைப் பிரமதகணங்களும், வேத

கோஷமும், ஐபத்தையும் மேன்மையையுங் கொண்ட விருஷபவடிவமான நந்தியும் விரும்பிச் சூழ்ந்துவராநிற்க, ஸ்ரீ கைலாஸத்துக்குச் சென்றருளினர்.

சிவபிரான் சென்றபின்பு, தேவராஜனான இந்திரனும், துந்துபியென்னும் வாத்தியங்கள் முழங்கவும், தேவர்களும் முனிவர்களும் நெருங்கி வாழ்த்தவும், தனது தேரின்மேல் ஏறிவந்து, விசயனைத் தழுவிக்கொண்டு, 'நீ செய்த தவத்தின் பயன் நீடூழி வாழ்க. உன்வில்லும் அம்பறாத்தூணியும் அம்பும் வாழ்க. திருவிளக்கின் ஒளியினும் மேலான பெரிய அழகிய நீலநிறமான உன் உடம்பு வாழ்க, வாழ்க. சோதிரூபமான சிவபிரானுடன் போர்செய்த உன் உடல் வலிமையும் திறமையும் வாழ்க' என்று சொல்லிக்கொண்டு, தன்து இரண்டு பாதங்களையும் வணங்குகிற புத்திரனை அருச்சுனனைத் தன்கைகளால் தனது அழகிய தேரில் எடுத்து ஏற்றிக்கொண்டு, மிக்க மகிழ்ச்சியோடு தனது சிறந்த தெய்வத்தன்மையுள்ள சுவர்க்கத்துக்குப் போனான். அங்கு, அருச்சுனனைத் தேவேந்திரன் தேவாமிருதம் உண்பித்து, கற்பகமலர்மாலையளித்துத் தன் அர்த்தாஸனத்தில் வீற்றிருக்கச் செய்து, தெய்வத்தன்மையுள்ள இரத்தினகிரீடம் சூட்டினன். தேவலோகத்தில் இந்திரனால் கிரீடம்தரிக்கப்பெற்றதனால், அவனுக்குக் கிரீடி என்ற ஒரு சிறப்புப்பெயர் பொருந்திற்று. பின்பு, இந்திரன், அருச்சுனனுக்குப் பற்பல அஸ்திரங்களை மந்திரங்களுடனே அளித்தனன்; அன்றியும், பலவகைச் சிறப்புக்களையும் செய்து கௌரவித்தனன். பிறகு, விசயன், தேவேந்திரனிடம் விடைபெற்று, தருமபுத்திராதியரிடம் சென்று, தருமபுத்திரனையும் வீமனையும் வணங்கி, தன்னை வணங்கிய தம்பியரை அன்புடன் அணைத்துக்கொண்டு, தான் தவஞ்செய்ததும், பரமசிவன் பிரசன்னமாய்ப் பாசுபதாஸ்திரம் முதலியன அளித்ததும், தேவலோ

கம் சென்றதும், அங்கு நடந்தனவும் முதலிய விருத்தாந்தங்களைச் சிறிதும்விடாமல் ஸவிஸ்தாரமாகச் சொல்லி, அவர்களை மகிழ்வூட்டித் தானும் மகிழ்வுற்று, பன்னிரண்டு வருஷம் வனவாசமும் ஒருவருஷம் அஜ்ஞாதவாசமும் முடித்து, துரியோதனன் தாயபாகம் கொடுக்காததனால் மூண்ட பாரதயுத்தத்தில், சபதம்செய்தபடி சத்துருக்களையெல்லாம் தான்பெற்ற திவ்வியாஸ்திரங்களால் கொன்றனன். தருமபுத்திரன் முதலியவர்களும், தாம் சபதம்செய்தபடி பகைவர்களைச் சங்கரித்தனர். பிறகு, பாண்டவரைவரும், தம் நாட்டைப் பெற்றுச் செங்கோல் செலுத்திக்கொண்டு, இனிமையாகப் பலகாலம் வாழ்ந்திருந்தனர்.

இச்சரித்திரத்தினால், இஷ்டப்பிராப்திக்கும் அநிஷ்டநிவிருத்திக்கும் ஈச்வரனைக் குறித்த தவமே காரணமெனத் தெரிகின்றதனால், நாம் நம்மால் இயன்றவளவு கடவுள் விஷயமான பக்தியையும் தியானத்தையும் மேற்கொள்வோமாக.

விசயத்தவசியும் சிவவேடனும்

என்னும் சரித்திரம்

முற்றிற்று.

## இதிஹாஸ புராண கதை, சரித்திரம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| பிரகலாதாழ்வான் சரிதை... ... | 0 | 6 |
| வில்லிபுத்தூரார்பாரதம், கிருஷ்ணன் தூது சர்க்கம் (செய்யுள்) ... ... | 0 | 4 |
| மார்க்கண்டேய சரிதம் ... ... | 0 | 4 |
| விசயத்தவசியும், சிவவேடனும் ... | 0 | 3 |
| இடைக்காடர் சரித்திரம், திருவள்ளுவர் சரித்திரம் ... ... | 0 | 3 |
| ஸ்ரீவாமன சரித்திரம் ... ... | 0 | 2 |
| நம்பாடுவான் சரித்திரம் ... ... | 0 | 2 |

## இனிய கதை.

| | ரூ. | அ. |
|---|---|---|
| பத்மினி : இந்நாட்டுச் சரித்திர ஸம்பந்தமான ஓர் இனிய உண்மைக்கதை ... | 0 | 12 |
| பஞ்சதந்திரவசனம் அரும்பதவுரையுடன்.. | 0 | 6 |
| ஷை மூலம்.. ... | 0 | 4 |
| சம்பகமாலினி ... ... | 0 | 4 |
| குலசேகரன் ... ... | 0 | 4 |

## சாஸ்திரம்.

| | | |
|---|---|---|
| ஹஸ்தரேகை சாஸ்திரம், ஹஸ்தலக்ஷண சாஸ்திரம். ... ... | 2 | 0 |

## நீதிநூல், துதிநூல்.

| | | | அ. | பை. |
|---|---|---|---|---|
| குமரேசசதகம் : ஸாரமாகத் தேர்ந்தெடுத்த செய்யுள்களின் திரட்டு; அரும்பதவுரையுடன் ... ... | | ... | 2 | 6 |
| திருவேங்கடசதகம் | ஷை | ... | 2 | 0 |
| அறப்பளீசுரசதகம் | ஷை | ... | 2 | 0 |
| விவேகசிந்தாமணி | ஷை | ... | 1 | 6 |
| கம்பராமாயண நீதிகவித்திரட்டு | | ... | 2 | 0 |
| திருக்கச்சித் தேப்பெருமானந்தாதி | | ... | 2 | 0 |
| மன்பதையாற்றுப்படை | | ... | 2 | 0 |

[தபால் செலவு வேறு.]

இவை வேண்டியவர்கள், கீழ்க்குறிக்கப்படுகின்றவர்களிடத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்,
தமிழ்ப்பிரதமபண்டிதர், காலெஜ், வேலூர்.

சொந்தக்காரர், ரிப்பன் புஸ்தகசாலை,
87. தம்புசெட்டிவீதி, சென்னை.

ம-ா-ா-ஸ்ரீ. D. K. சுப்பைய நாயுடு அவர்கள்.
புஸ்தகவியாபாரிகள், தஞ்சாவூர்.

ம-ா-ா-ஸ்ரீ. மு. கருப்பண பிள்ளையவர்கள்,
புஸ்தகவியாபாரிகள், புதுமண்டபம், மதுரை.